மைத்திரேய புத்தர்



Pax Ravichandra

pax.ravichandra@gmail.com

21-2-2024

மைத்திரேய புத்தர் பெருமான்	
1	எலான் முகமட்
2	இனம் பாதி, மதம் பாதி
3	இருளும் ஒளியும்
4	கௌரவம்
5	கட உள்ளே
6	கழுகு, கடவுள், மனிதன்
7	கண்ணீரும் புன்னகையும்
8	காதல் விலை மகள்
9	கூடாரவாசிகள்
10	மந்திரியும், மகா அசோகரும்
11	மைத்திரேய புத்தர் பெருமான்
12	நான்காம் மலம்
13	ஓம்ரன்
14	ஒரு பிடி கடுகு
15	பெற்ற பிள்ளையை விற்ற அன்னை
16	போதையும், பேதையும்
17	புத்தரைத் தேடி
18	றிஸானா
19	சாதுவம், சீடரும்
20	செஞ்சட்டை
21	ஷரிய நீதி
22	தமிழ் தேசியம்
23	துறவியும், திருடனும்

எலான் முகம்மட்-Alan Kurdi Mohamed

பிறந்த மண்ணில் வாழ்ந்திடப் , போர் இடங்கொடுக்கவில்லை,
அகதியாய்ப் புகலிடம் தேடியும்
அல்லாவைத் தொழும்-அண்டை நாடுகளும்
“சுன்னி-சியா” மோதலினால் இடம் கொடுக்கவில்லை





கடல் கடக்க-அலை கடலும் இடங்கொடுக்கவில்லை,
ஆழ் கடலில் படகு கவிழந்து உயிர் பிரிய
அலைக்கரங்கள் உடலத்தைக் கரைசேர்க்க,
அல்லாவைத் தொழுத நிலையில் இறந்து கிடந்தான்
-குழந்தை எலான் முகமட்-

“அல்லாஹூ அக்பர்” கோஷம் வானைத் தொட
யுத்தத்தால் எரிநரகான உலகில்-இனியும்
குழந்தையால் வாழ முடியாதென்றே- “சுவனத்தில் ”
தஞ்சம் கொடுத்திடவோ-இறைவனும்
குழந்தையின் உயிரைப் பறித்தெடுத்தான்?

மண்ணில் வாழ இடமின்றி, மாகடலில் வாழ இடமின்றி
விண்ணில் வாழ இடம் கேட்டா-வல்ல அல்லாவை
முகம் படியத் தொழுது கரையில்-பிணமாய்
விழுந்து கிடக்கின்றான் சிறுவன்-எலான் முகம்மட்?

பிறந்த மண்ணும் விரட்டியடிக்க, அண்டை நாடுகளும்
கதவுகளை அடைக்க, ஐரோப்பிய நாடுகளில்
தஞ்சம் கோரித் தொடங்கிய கடல் யாத்திரை
அவலமாய் முடிந்த இறுதி யாத்திரை



கடலும் இடமில்லை என்று கரை ஒதுக்கிட, வல்ல அல்லாவே!
வாழ இடம் கொடு என்று உயிரும் இரைஞ்சி, உடலைப் பிரிந்து
தஞ்சம் கோரிச் சுவனம் சென்றிட, குழந்தையின் உடலைத்
தழுவி அழும் கடல், கண்டவர் விழி எழுதும் கண்ணீர் மடல்

வாக்களிக்கப்பட்ட பூமியிலும், இன்றும் காயாத ஆபேலின் இரத்தம்
அல்குரான் ஓதி, ஐவேளை அல்லாவைத் தொழும் பூமியிலும்
ஓயாத சுன்னி-ஷியா யுத்தம், எரியும் முட்செடியில் காட்சி
கொடுத்தவர்-இன்று எரி நகரங்களால் துன்புறும் அவலம்-



கடவுளை அன்பு செய்திட யாரும் இல்லாத உலகில்
இறைவனும் நாதியற்ற அகதி- தன் மகன் வழியாய்
அன்பைச் சொல்லிய இறைவன் -சிலுவையில்
அன்பு மகனைக் கொன்ற மதம் கண்டு கலங்கி நின்றார்

மத்திய கிழக்கை எரித்திடும் மதவாத யுத்தங்கள்
உலகை அச்சுறுத்தும் சைத்தானின் வேதங்கள்?
எகிப்திய பாரோவாய் இஸ்ராயேலர்கள்,
துன்புறும் அடிமைகளாய்- நாடற்ற பாலஸ்தீனர்கள்

அழுகைச்சுவரை தொழுதிடும் யூதர்களுக்கு-பாலஸ்தீனர்களின்
அழுகையும் புலம்பலும் சத்தமுமானது-யூத இருப்பிற்கும்-
இறைவன் தேர்ந்த இனம் என்ற பெருமைக்கும்
அல் அக்ஸா பள்ளிவாயில் அச்சுறுத்தலானது.

ஐவேளைத் தொழுபவர்களுக்கு,
அழுகைச்சுவரும் வெறும் குட்டிச்சுவராய்
பழங்கட்டடத்தின் சுற்று மதிலாகிப்போனது.

வேதங்கள் வெவ்வேறாகி ‘‘வல்ல யெகோவாவும்’’,
எல்லாம் வல்ல ‘‘பிதாவும்’’,‘‘வல்லா அல்லாவும்’’
வெற்றுப் பெயர்களானபோது, மதவாதம் ஓங்கியது
மதம் அபினியும், போதை வஸ்துமாய் நாறியது

சிலுவைப் போர்களாய்த் தொடங்கி-இன்றும் தொடரும்
யூத-கிறிஸ்தவ-இஸ்லாமிய யுத்தங்கள்.
கத்தோலிக்க-புரோடஸ்டான்டு,
சுன்னி-ஷியா என ஓடிடும் இரத்தங்கள்.



மானுடத்தை தண்டிக்க -நரகத்தில் இடமில்லை என்றோ-
எரிநரகை-இறைவன் மதவாத உலகைச் சிருஷ்டித்தான்?
‘‘கடவுள் இறந்து விட்டார்’’-நீட்சேயின் கூற்றை நிஜமாக்கிட
மனிதனும் இறைவனைக் கைவிட்டான்?

மோட்சத்தில் வாழும் இறைவனுக்கு-நரகத்தில் வாழும்
மனிதன் எதற்கு? மதவாத மனங்களுக்கு அன்பே சிவம் எதற்கு?
அன்பே இறைவன்- அன்பில் நிலைத்திருப்பவன்-இறைவனில்
நிலைத்திருக்கிறான், இறைவனும் அவனில் நிலைத்திருக்கின்றாா

எல்லாப் புகழும் இறைவனுக்கே
இன்பமேசூழ்க , எல்லோரும் நலம் வாழ்க
Pax Ravichandra-29-09-2023

இனம் பாதி மதம் பாதி கலந்து செய்த மது

எளிய மனத்தவருக்கே இறையரசு, தூய மனத்தவருக்கே
சத்திய தரிசனம் கனவாக, இனம் தேர்ந்து மதம் கொடுத்த
இறைவன் களைத்திட்டார், “மதவெறி பிடித்த மனிதன்”,
கொலை வெறியோடு அலையக், கண்டு மனம் வருந்திட்டார்.






“இருப்பவர் நாமே” என மொழிந்தவர்
யூதரைத் தெரிந்து “தோரா” கொடுத்து யெகோவா ஆனார்
இயேசு வழியாக அன்பின் வேதம் கொடுத்து
கிறிஸ்தவர்களைத் தெரிந்து இறை தந்தையானர்

இஸ்மாயிலருக்கு -“ வல்ல அல்லா”வாகி
முகம்மது நபி வழியே-“அல் குரானை” வழங்கி
சகோதரத்துவத்தால் இன்புற்றார்

இனங்களை மாற்றி, மதங்களை கொடுத்து, தம் பெயரையும்
மாற்றிடும் இறைவனால். உலகில் தீராத மதப்பூசல்கள்.
“வேதங்களால்” உலகெங்கும் நாளும்-விதாண்டா வாதம்
மானுடத்தைப் பிரிக்கும் இரும்புத் திரையாய் மதவாதம்

மனுஸ்மிருதியின் சாதிய சாம்ராஜ்யத்தில் பார்பனியத்தின் ஆட்சி
அகிம்சை, பகுத்தறிவு பௌத்தம்- சமணத்தின் அகப்புரட்சி
அன்பே தெய்வம் இயேசுவின் அகக்கிளர்ச்சி-அனுபூதியில்
வாழ்ந்தறியும் உண்மையே தெய்வம் வேண்டாத புரட்சி?




இனி ஒரு நபியில்லை இறுதி நபி-முகம்மதே
இஸ்லாமியர் உரைக்க-இறைவனும் இடிந்து நின்றார்
இனம் தெரிந்து மதம் கொடுத்த- ***பரப்பிரம்மம்***
நாஸ்தீகரைத் தேடி அலைகின்றார்.

வாங்கொலியும், கோயில் மணி ஓசைகளும் காதைப் பிளக்க
பிரித் ஒலிகளும் நாமாவளிகளும் ஊரை அதிர வைக்க
பிறை, சிலுவை, நட்சத்திரம் , தர்மச் சக்கரம் ஒளிர்ந்திட
அன்பு, உண்மை, கருணை மறந்து, உருவழியும் மதங்கள்

சாதிய யாகத்தில் -ஆகுதியாய் தலித்துக்கள்-
சிலுவைகளில் இயேசுவாய் சிறுபான்மையினர்
சாதியத்துக்கு சாமரம்-இனவெறிக்கு ஆசிர்வாதம்
சாவான பாவம்-உலகோ எரிநரகம்

கம்யூனிஸம் காலாவதியாகி-இனம் பாதி
மதம் பாதி கலந்து செய்த மதுவும் "அபினியாய்"
மதப்போதையை ஏற்றிட கலங்கிடும் இறைவன்.



அழுகைச் சுவரும்- அல் அக்ஸா பள்ளியும் மோதிட
வாக்களிக்கப் பட்ட பூமியிலே வற்றாத இரத்தம்
ஷலோம்-சலாம் அலேக்கும் -வெற்று வாழ்த்தாகிட
நாளும் தொடரும் யுத்தம்

பல்லாயிரம் பிரிவாய் கிறிஸ்தவம்-இன்றும் இயேசுவைச்
சிலுவையில் அறைந்திடும் நிதரிசனம், ஷியா -சுன்னி சிந்திடும்
இரத்தம் அச்சுறுத்திட, இனம் தெரிந்து மதம் கொடுத்த
இறைவன், மதங்களைக் கைவிட்ட ஆதங்கம்?

இனமதப் பூசல்களால் இடிந்த கோயில்களும் , தூர்ந்த விகாரைகளும்,
எரிந்த மசூதிகளும் அச்சமூட்ட, என்றோ மறைந்து, சிலைகளாய் நின்று,
கதைகள் சொல்லும்-மொஹஞ்சதாரோ -ஹரப்பா, எகிப்து-கிரேக்க-
ரோம-இன்கா-மாயாத் தெய்வங்கள் வியப்பில் ஆழ்த்த
ஆணவ மனம் கடந்து சூனியத்தில் நிலைத்த இறைவன்
கதையா? கற்பனையா? வெற்று நம்பிக்கையா?



இனம் பாதி- மதம் பாதி கலந்த மதக்கலவையோ?
இல்லை மதப்போதை தரும் மதுக்கலவையோ-கடவுள்
அன்பின் அமுதோ இல்லை பகைமையின் ஆலகால நஞ்சோ?
மானுடா, கடவுளை கண்டாள் கேள் ?

"கடவுள் இறந்துவிட்டார்" பிரட்ரிக் நீட்ஸேயின் பிரகடனம்
மதம் கடந்த ஆன்மீகவாதியைத் தேடிடும் இறைவன்
தூய மனங்களில் தரிசனமாகும் அன்பன்

உன்னதங்களில் இறைவனுக்கு மகிமையும் பூவுலகில்
நல் மனத்தவருக்கு அமைதியும் வானவர் நற்செய்தி
உள்ளுணர்வின் அதி உன்னதமே இறைவன், நல் மனமே
பெருங்கோயில் அனுபூதியில் அறிந்தவருக்கே ஆனந்தம்

உண்மை தவமாக, அன்பு சிவமாக, வாழ்தலே,
மெய்யான இறை வழிபாடு-மற்றெல்லாம்
மதப்போலிகளின் கூத்து, வெற்றுக் கூப்பாடு

எல்லாப் புகழும் இறைவனுக்கே
இன்பமே சூழ்க, எல்லோரும் நலம் வாழ்க
Pax Ravichandra-29-09-2023

இருளும் ஒளியும்- இறைவன்





ஒன்றினுள் ஒன்று மறைந்தும் கலந்த இருளும், ஒளியுமாய்
தன்னுணர்வும், தன்னுணர்வற்ற நிலையுமாய்
நிர்க்குண, சகுண பிரமம்மாய், பாலினம் கடந்த
அர்த்நாரிஸ்வரனாய், சக்தியும், சடமுமாய்,
யிங், யங்காய், சிவ சக்தியாய் பிரபஞ்சம்

“ஒளி உண்டாகுக” இறைவனின் முதல் வார்த்தை
இருளில் ஒளிரும் ஒளியாய் தன்னை வெளிப்படுத்திய
ஓங்கார நாதம்- ஆதியின் பிரசன்னம் அபூர்வ கீதம்



ஒன்றின் முடிவில் ஒன்றின் தொடக்கம்
சடமழிய, சக்தியாய் மாறும்-பிரபஞ்ச இயக்கம்
ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள்
இரண்டும் தனித்துவமான தத்துவங்கள்



ஒன்றில்லாமல் மற்றொன்றில்லை
சிவமின்றி சக்தியில்லை, மாறாத உண்மை
இருளும், ஒளியும் நம்முள்ளே, ஒளியே விழிப்புணர்வு
இருளே சுயத்தை மறைக்கும் ஆணவ உணர்வு
இரண்டும் கலந்ததே தோற்றமான இருப்பு

The Tao that can be told
is not the eternal Tao.
The name that can be
named is not the
eternal Name.
The unnamable is the
eternally real.
Naming is the origin of

உலகின் ஒளி நீங்கள், உன் ஒளி ஒளிர்வதாக
உனக்கு நீயே ஒளியாகிப் போ-சத்திய தரிசனங்கள்
உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்
உள்ளுணர்வின் உன்னதமே மகா தீபம்



இருளும் ஒளியும் ஒரு வட்டத்தில் கலந்த
இரு தத்துவ நிலைகள், ஒன்றின் முடிவில்
ஒன்றின் தோற்றம்-பிரித்தறிய முடியாத இயக்கம்
எல்லாம் தோற்ற மயக்கம்?

What is Tao?
It is just this.
It cannot be
rendered into
speech.
If you insist on an
explanation,
This means exactly
this

ஒளியில் மறைந்தது இருள், இருளில் ஒளிர்வதே ஒளி
ஒன்றில் ஒன்று மறைந்த அதிசயம். எரிந்தும், எரியாத
முட்செடியாய்-இருப்பவர் நாமே இருப்பின் நாமம்

இருளும், ஒளியும் பிரிக்கமுடியாத இணைப்பு
சிவமும், சக்தியுமான அன்பின் அதிசயக் கலப்பு
ஒன்றைத் தெரிந்தால் மற்றதை இழக்கின்றோம்



இருமை கடந்த, தெரிவைத் துறந்து
சாட்சி பாவமாகும்போது சச்சித் ஆனந்தம் நாம்
தூய மனத்தவருக்கு சத்திய தரிசனம்-நிதரிசனம்



அறிபவை அனைத்தும் சார்பு நிலை உண்மைகளே
அறியாததோ நிறை உண்மை, நேர், எதிர் மின்னோட்டங்கள்
காணமுடியாத இருப்பான சக்தியோ-மின்சாரம்

வார்த்தை, தத்துவம் கடந்தது
வார்த்தைகளால் எச்சிலாக்க முடியாதது சத்தியம்
தூய மனத்தவருக்கே சத்திய தரிசனம்
எளிய மனத்தவருக்கே இறையரசு

Within light there is darkness, but do not try to understand that darkness.

Within darkness there is light, but do not look for that light.

Light and darkness are a pair, like the foot before and the foot behind in walking.

Each thing has its own intrinsic value and is related to everything else in function and position.

Ordinary life fits the absolute as a box and its lid. The absolute works together with the relative, like two arrows meeting in mid-air.

நம் ஒளி ஒளிர்வதே மெய்யான தீபத்திருநாள்
அன்பு ஒளிர, உண்மை ஜொலிக்க
ஆணவத்தை ஆகுதியாக்கும் அக வேள்வி
நாம் கொண்டாடி மகிழத் தீபாவளி



நீரைப்போல் மென்மையானது ஏதுமில்லை
சுனாமியாய் மாறும்போது எதிர்கொள்ள ஏதுமில்லை
தென்றலைப்போல் இதமானது ஏதுமில்லை
பெரும் புயலாய் மாறிட தடுத்திட யாருமில்லை

பொங்கிடும், காற்றும், கடலும் ஆணவமே
காற்றே நில், கடலே அமைதி கொள்-
கிறிஸ்து உள்ளுணர்வே அமைதியை அருளும்
மனம் கழிந்தால் நாம் சுத்த சைதன்யமே-
நாம, ரூபம் கடந்ததோ தாவோ நாமே



வார்த்தை கடந்த வாழ்த்துக்கள் மறைய
உண்மை, அன்பு நம்மில் ஒளிர்ந்திட-உலகை
ஒளிர்விப்பதே மெய்யான தீபவாளி

பெருமான் புத்தர், மகாவீரர், இயேசு, இன்றும்
அணையாத தீபங்கள்-வணங்கி வாழ்த்துவோம்
நம் வாழ்வு ஒளிர்ந்தால், போராடும் உலகில் ஒளி பரவும்
நல்மனங்களில் அமைதி நிலைக்கும்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-12-11-2023

கௌரவம்

சுமை சுமந்து நலிந்த உயிரும், மெய்யும், சுமை தாங்கியின்றிச் சோர்ந்திருக்க
துயரமும், வறுமையும், கைமையும் வாழ்வைப் போராட்டமாய் மாற்றிட
வண்ணம் கலைந்த சோகச் சித்திரமாய்
வடிவம் சிதைந்த கலைச்சிற்பமாய்
நடை பாதையோரம் கடைவிரித்த மூதாட்டிகள்



கண்களில் ஈரம் கசிய, கனத்த மனத்தோடு
உழைக்கும் உன்னதத்தை வியந்து பார்கின்றேன்.
கண்ட கனவு கலைந்திட-ஏழைகளோ அநாதை, விதவைகள்
உறவுகள் கைவிட நூலறுந்து புழுதியில் விழுந்த பட்டங்கள்

நடை தளர்ந்து, விழி மங்கி ஒளியிழந்து
நரையும், திரையும் மலர்ந்த மெய்யில்-நாளும்
வறுமை நெய்யும் கொடுமை- மனதை வருத்த
இரந்து வாழாமல்-ஒட்டுண்ணியாய் வளராமல்-
போராடிச் சொந்த கால்களில் நிற்கும் மாண்பு
மலைக்க வைத்தது



உழைத்து வாழும் கௌரவம் நிலைத்து நிற்க
உலக தொழிலாளர் வர்க்கம் நிமிர்ந்து நிற்க
பெற்ற தாயைக் கைவிட்ட பிள்ளைகளும் நாணி வெட்க
முதுமையிலும் உழைத்து வாழும் பெண்மை
வணக்கத்துக்குரிய அம்மை

ஏழ்மையைச் சாதகமாக்கி -ஏழையை ஏமாற்றாதீர்
பேரம் பேசி உங்களைத் தாழ்த்தாதீர்
இது வணிகமல்ல, அன்னையின் ஊன்றுகோல்
தட்டி வீழ்த்தி விடாதீர்,



இது வாழ்வாதாரத்தின் ஆணிவேர்
பேரம் பேசி இதயத்தைச் சாய்க்காதீர்
இது உழைப்பின் உன்னதம்-மதித்து வாங்குங்கள்
மகிழ்வோடு உரையாடுங்கள்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-25-5-2023

கட உள்ளே

இளமையும், அழகும் பொங்கிடும் பருவத்தில்
இயற்கையின் நியதியால் ஈர்ப்புண்ட உள்ளங்கள்
கவர்ச்சியும், காமமும் காதல் எனச் சொல்ல
இரு மனம் கலந்த உறவில் பூத்த
திருமணமோ வாழ்வில் இனிய நறுமணம்





காலங்கள் செல்ல, மங்காத கவர்ச்சியில்
பூத்த பொறுப்புணர்ச்சி , குடும்பத்தைக் காக்க,
வாழ்க்கையை தறிக்கும் வறுமையைத் தறிக்க
ஏந்திய கோடரி, விறகு வெட்டியான உழைப்பாளி

நறுமணம் வீசிய திருமண வாழ்வில், நாளும் வறுமையின்
துர்நாற்றம், கழுதையோடு காடு சென்று,-விறகு
வெட்டியாய் பிழைக்கும் வாழ்வில் , தறிக்க முடியாத
பெருமரமாய் ஆசைக் காட்டில் வறுமை

கவலைகளால் கலங்கிய மனம் காட்டில், விறகு தேடி அலைய,
கம்பீரமாய் ஒலித்த குரல், “கட உள்ளே”, காண்பாய் அதிசயம்
கண்களை மூடித் தியானத்தில் அமர்ந்திருந்த
துறவியின் கட்டளையோ ஆசீர்வாதம்



வணங்கி உள்ளே சென்றவன் கண்டதோ பட்டுப்போன
சந்தன மரம், சந்தோஷத்தால் நிறைந்த மனம்,
வாச மரத்தை வெட்டிக் கழுதையில் ஏற்றியவன்
வாழ்வில் நறுமணம், வறுமை வருத்தாத புது இனம்

செல்வோம் , செல்வோம் என்ற செல்வம் சென்றிட,
மீண்டும் கழுதையோடு காடு வந்தவனைக்
கனிவோடு நோக்கி, ஆழமாய் உள்ளே செல்
ஆணித்தரமாய் உரைத்த துறவியின் குரல்



சென்றவன் கண்டதோ செப்புச் சுரங்கம்
தீய்க்கும் வறுமை தீய்ந்ததென்ற மனமயக்கம்
வெட்டிச் எடுத்து வீடு திரும்பியவன்-களிப்போடு
காட்டை மறந்தான் சில வருடம்

காலங்கள் மாறிட, வந்த செல்வம் மறைந்து, வறுமை
திரும்பிட, மீண்டும் காடு வந்தவனுக்கு, கனிவோடு உரைத்த
குரல்-கட உள்ளே பணிவோடு பணிந்து ஆழச் சென்றவன்
கண்டதோ வெள்ளிச் சுரங்கம்

வெட்டி எடுத்து வீடு சென்றவன் வாழ்க்கை
மாளிகையாக, மனைவி பிள்ளைகள்
ஆடம்பர ஊதாரியாக, ஆண்டுகள் பல
ஆரவாரமாய்க் கழிந்த வாழ்வு



எல்லாமிழந்து மீண்டும் வறுமை தீண்ட
வாயிலில் கடன்காரார் வரிசையில் அச்சுறுத்த
மனம் வெதும்பிக் காடு வந்தவனை வரவேற்ற குரல்
ஆழமாய்ச் செல் ஆசீர்வதித்தது

நம்பிய வார்த்தைக்கு நற்பலன் கண்டவன்
ஆழச் செல்லக் கண்டதோ தங்கச் சுரங்கம்
மனம் வாழ்த்த, வெட்டிய தங்கத்தோடு
பெருஞ் செல்வனாய் மாறிட வாழ்க்கை





ஓலைக் குடில் வீடனானது. வீடோ
கானகம் தந்த செல்வத்தால் மாளிகையானது
மனைவி, மக்கள், நண்பர் என உறவுகள் பெருகிட
உல்லாச வாழ்வு பழையதை மறந்தது

ஆண்டுகள் உருண்டோட, முதுமை நெருங்கிட
கசந்த செல்வம், யாருமறியாது அனைத்தையும்
துறந்தவன் காடு வந்து துறவியைக் கண்டு
பணிந்து தொழுது பரிதாபமாய் அழுதான்

இத்தனை காலம் காத்திருந்தேன்-இந்த
திருநாளுக்கு, இன்று வந்தாய், இல்லையேல்
ஆழச் சென்று அடைந்ததால் ஆனந்தமில்லை
அறிந்த வாழ்வு துறந்து வந்தது பேரானந்தமே



ஐயனே, இத்தனை செல்வம் உள்ளே இருப்பதை அறிந்தும்
எதையும், வேண்டாது ஆனந்தமாய் தன்னந் தனியே
தன்னுள் நிலைத்து இருக்கும் இன்பத்தை அறிய வந்தேன்

உங்களுக்குத் தெரியும் அழியாத செல்வம் இருக்குமிடம்
கள்வரும், பூச்சியும் அரிக்காத பெருஞ்செல்வத்தின்
இருப்பிடம், ஏழைக்கு வழி காட்டுங்கள்

வறுமையை அறிந்தேன். செல்வத்தில் திளைத்தேன்,
மண், பொன், மனைவி. பிள்ளைச் செல்வம் கண்டும்
மனதில் வெறுமை, அகவறுமையோ பெருந் துன்பம்,
அழியாச் செல்வம் நாடி, அந்தியில் வந்துள்ளேன்-
அமைதியில் நிலைக்க அருள் கூர்ந்து வழி கூறுங்கள்

புன்னகை பூத்த துறவி ஆழமாய்ச் செல்-அழியாப்
பெருஞ் செல்வம் உனக்குள்ளே, மனங்கழித்தால்
மாறாத பெருநிதி, சச்சித்தானந்தமோ குபேர நிதி

மனமோ ஆசைக் காடு, ஆசையும்,
அறியாமையும் பெருந் துன்பம்-அறிந்தவன்
விழிப்புணர்வு என்னும் கோடரியால்
ஆசைகளைத் தறித்து அமைதி காண்கிறான்



அருகே இருந்த மரத்தைக் காட்டியவர்
அமர்ந்து தியானத்தில் இன்புறு
திருடனும் கவராத, கறையானும், பூச்சியும்
அரிக்காத ஆனந்தத்தை உனக்குள் காண்பாய்



வெளியே தேடுவதெல்லாம் வீணானவை
உள்ளே கண்டடைவதோ மெய்யானது
கட உள்ளே கடவுளாவாய்
சச்சித்தானந்தமே நம் மெய்யான நிலை

வறுமை அறிந்தாய், செல்வம் அறிந்தாய், வாழ்வின் சுக துக்கம்
அறிந்து நிலையாமையைப் புரிந்தாய், மனிதரை அறிந்தாய்,
செல்வத்தால்-கிடைத்ததோ துக்கம் எனக் கண்டாய், மகனே
உனக்காய் பல்லாண்டு காத்திருந்தேன் உன் மனம் கனிந்திட.



இன்று மனம் கனிந்ததுள்ளது, விதைப்பு நடந்திட
நல் நிலமாய் உன் மனம் பண்பட்டுள்ளது
உன்னுள் சென்று உன்னை அறிவாய்
தன்னை அறியும் மெய்யறிவே பரமானந்தம்



கண்களில் நீர் வடியக் கரங்கூப்பித் தொழுதவன்
எனக்காய் இத்தனை காலம் காத்திருந்த தங்கள்
கருணை பெரிது, உவகையோடு மரத்தடியில்
அமர்ந்து மனதைத் தறித்தான், தியானத்தில்
மனங்கழிந்திட மகத்தான பேரானந்தம் மலர்ந்தது

“Freedom from the mind is peace”

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-12-02-2024

கழுகு-கடவுள்-மனிதன்






பெற்றோரைப் பிரிந்து, பெரும் பசிப்பிணியால் வருந்தி
உடல் நலிந்து சோர்ந்து, ஓரடி நடக்கப் பலமின்றி
மண்ணில் தலை வைத்து இறைவனை மன்றாடும்
அநாதரவான சிறுவனை -இரையாய்க் கண்டும்
இரையைக் கொத்திக் கிழித்து கொன்று உண்ணும்
கொடுங்கழுகும் வருந்திக் கொல்லா நோன்பிருந்தது-

சாகுமுன் பிள்ளையைக் கொல்வது பாவம்
செத்தபின் சவத்தை உண்டு
தன் கொடும் பசி தீர்ப்பதோ தர்மம்



இறுதிச்சொட்டுக் கண்ணீரும் இரத்தமாய் உதிர்ந்திட
தீராத பசியோடு சிறுவனும் இறந்திட-பொல்லாத கடும் பசி
“அப்பாவிக் கழுகைக்” கொல்லக் கூடாதென்று.
விழிகளை மூடி இதயத்தை கல்லாக்கிய இறைவன்?




பஞ்சத்தால் வாடும் சூடானில் 1994 இல்
இந்தக் கொடிய காட்சியைப் படமெடுத்த Kevin Carter
படத்தை கண்டு, நிஜத்தைப் புரிந்து-உலகம் மனந் திரும்பும்-
கனவாக, துயரம் தாங்காது உயிரை மாய்த்த புனிதர்



பஞ்சமும் யுத்தமும் வாட்டிடும் சூடான் தேசத்தில்
நாளும் பசியால் மடியும் பல்லாயிரம் உயிர்கள்
மடியும் போதோ உருமாறிய எலும்புக்கூடுகள்

கூவியழைத்தும் தேடிக் களைத்தும்-கடவுளைக்
காணாத மனிதன்-கழுகும் தன்னைக் கொல்லுமென்று
அஞ்சித் தலை மறைந்தாரோ? நாளும் பலி இறைச்சியும்
மதுவும் குடித்துக் கொளுத்த சொர்க்கவாசி இறைவன்?



ஆயுதங்களுக்குச் செலவிடும் பணத்தில் கொஞ்சம் ஏழைகளின்
பசியாறப் பகிர்ந்திருந்தால் கொடுமை நிகழ்ந்திருக்காது-
மத மாற்றத்திற்குச் செலவிடும் செல்வத்தை கொடுத்திருந்தால்
இறைவனும் மனம் மாறியிருப்பாரோ தெரியாது?



இங்கே கடவுளுக்கும் இனம், மதம், மொழி, நிறம்
மதம் கடந்த கெவின் காட்டரின் மனித நேயமோ தெய்வீகம்
பகிர்ந்து வாழ்ந்தால் பஞ்சம் மறையும்
வயிறு நிறையும்-அன்பே தெய்வம் எனப் புரியும்

மானுடமும், மதங்களும் வெட்கித் தலைகுனிய
இங்கே பசிப்பிணிக்கு பலியான குழந்தையோ இயேசு?
இரத்த வெறிபிடித்த யுத்த வெறியர்களோ பிசாசு


எல்லாப் புகழும் இறைவனுக்கே

Pax Ravichandra-29-09-2023

கண்ணீரும் புன்னகையும்

ஒளியிருந்தால், கண்ணாடியிலோ, தண்ணீரிலோ
நம் விம்பத்தை நாம் காணலாம்
இருளில் இரண்டுமிருந்தும் காணாமுடியாத நிலைமை
தன்னுணர்வே நம் இருப்பபிற்குச் சான்றான உண்மை





அழுகைச் சுவரும், அல் அ.:.க்ஸா பள்ளியும் தொழுகைக்
கூடங்கள், நாளும் பல் முறை தொழுது இரந்தும்
கண் காணாத இறைவன் கல்லான இதயங்கள
தொடங்கிய யுத்தம், அமைதி, நீதிக்குப் பகைவன்



உன்னில் இருப்பதோ என்னுள்ளும் இருப்பது அறியாத மாயங்கள்,
உன்னைப்போல் உன் அயலானை நேசி மதப் போதனைகள்.,
சுவரை நோக்கித் தொழுவார், சூனியத்தில் காபா நோக்கி அழுவார்
அன்பை நிலைநாட்டி, அமைதியைத் தேடாத மதவாதக்குருடர்



அபினியும், போதையுமாய் மதம், அடிமனதில், யூதன்,
இஸ்லாமியன் மதவெறியோ இருப்பின் தளம்
கொல், அல்லது கொல்லப் படுவாய் களத்திலோ,
நீதியான போதனை, வெற்றியோ வேண்டும் சாதனை

ஆயிரத்து இருநூறு உயிர்கள் அகாலமாய் மாள, இரு நூற்று
ஐம்பது பேர் பணயக் கைதிகளாய் மாற, ஹமாஸின்
அதிரடித் தாக்குதல், காஸா ரணகளமானது, கண்ணீரும்,
குருதியும் இரு தரப்புக்கும் சொந்தமானது.



கண்ணீரைத் தந்து, பந்தங்களைத் அழித்து
சொந்தங்களைத் திருடிச் சென்றார்,
புன்னகை மறந்து, புலம்பியழும் நெஞ்சங்கள்
சொந்தங்களை மீட்டிட கொடும் போர் என்றார்



காஸா களமானது, வாழிடமெல்லாம்
இடிபாடானது, மக்கள் அகதிகளாய் இடம் பெயர
மரணம் எண்ணிக்கையானது, மயான பூமியில்
அழுகையும், நெருப்பும் தொடர் கதையானது

கொட்டும் மழையிலும், கொளுத்தும் வெயிலிலும்
இடம் பெயர்ந்த அகதிகள் கூடார வாசிகளானார்,
உணவும், மருந்துமின்றி வாடி வருந்தி-நாளும்
உறவுகளைப் பறிகொடுக்கும் அவல நிலைக்காளானார்

நீருக்கும், மலசல கூடத்திற்கும், மாற்றுடைக்கும்,
சுகாதரத் திண்டுக்கும் வழியின்றித் நாறித்
தாய்க்குலம் தவிக்க, சொல்லொண்ணாத் துயர்
வருத்த, உறவுகளை தேடிக் கொல்லும் யுத்தம்





கஞ்சிக்கும், ரொட்டிக்கும் கலயங்களோடும்,
பசி வருத்தக் காத்திருக்கும் சிறுவர் காட்சி
கண்களை உறுத்தும், நாளும் நோன்பு,
யுத்தமோ ஜிகாத்து, இரத்தமோ செல்லாக் காசு

விளையாட்டும், படிப்பும் பாழாக,
அகதியாய், அநாதையாய் மாறும் சிறுவர்
சிறுமியர், விதவையாய், அங்கவீனராய்
தோன்றும் புதிய தலைமுறையினர்



குண்டு மழையில் உயிர்கள் எரியும்
குண்டின் அதிர்வில் கர்ப்பம் கலையும்
குருதிக் கறையோடு உடலங்கள்
கண்ணீர் கங்கையோடு உறவுகள்

பணயக் கைதிகளை விடுவித்து, மக்கள் மனங்களை
வெல்லப் பயங்கரவாத ஹமாஸிற்கு மனமில்லை,
மக்கள் படும் சொல்லொண்ணாத் துயரமோ -யூத
நத்தானியாவின் நெஞ்சைத் தொடவில்லை



வரலாற்றில் பட்ட துயர் யூதருக்குப் பாடமாகவில்லை
அழுகைச் சுவரில் முட்டி அழுதும் கண்ணீர்
ஓயவில்லை, அல் அ.்க்ஸாவில் பல முறை தொழுதும்
யாவே, அல்லா மனமிரங்கவில்லை?



மழை பொழியும் வானில் தீ மழை, காதல் வசந்தம்
பூத்த நெஞ்சங்களில் ஓயாத கண்ணீர் மழை,
கண்ட இன்பக் கனவு கலைந்திட, நம்பிக்கை நலிந்த
நிலை , வாழ்வோ மாயையான துன்ப நிலை

வயது வித்தியாசமின்றி நாளும் உயிரிழக்கும் உறவுகள்,
துணி மூட்டையாய் மண்ணில் புதைய, மனதில் புதைந்து,
முளைத்து முள்ளாய் வருத்தும் துயர நினைவுகள்

ஐவேளை தொழுதிட அல்குரானும், அல்லாவும்-எவ்வேளையும்
ஆராதிக்க ஆயுதமும், அராஜகமும், மதப்பயங்கரவாதமோ ஆளும் நீதி
அன்பு, உண்மை, இரக்கம், மன்னிப்பு என்றுமுள்ள தர்மத்தின் நீதி

ஒரு குழியில் உறங்கிடும் பல நூறு உறவுகள்,
இடிபாடுகளுக்குள் புதைந்த பல நூறு கனவுகள்
பசி, தாகம், தூக்கம் வருத்த. பறை நாய்களாய்
வேட்டையாடப்படும் பாலஸ்தீனர்கள்





அழுகைச் சுவரும், அல் அ.்.க்ஸாவும்
மானுடத்தைப் பிரித்து, மனித நேயத்தை அழிக்க
மதவாதம், பயங்கரவாதமான நீதி, யாவேயும்,
அல்லாவும் மோதிக்கொள்ள வேதங்களோ சுருதி

கண்ணியமான வாழ்வும், கௌரவமான சாவுமின்றி
மனிதம் அழிய மதங்கள் தேவையா? மோஸேயும்,
முகம்மதுவும் மோதிக் கொள்ள, இன்றும் சிலுவையில்
இயேசு வருந்த, இறைவன் கற்பனையா? கதையா?



ஓதும் வேதங்கள் மூன்றும் மனித நேயத்தை
வளர்க்கவில்லை, தொழுகைக் கூடங்களோ
எதிரிகளான நிலை, ஷலோம், சலாம் அலேக்கும்
வெற்று வாழ்த்தான அவல நிலை

மோஸே, இயேசு, முகம்மது நடமாடிய பூமியில் ஓயாத யுத்தம்,
நாளும் காயினின் இரத்தம் கடவுளை கதறி அழைக்கம் சத்தம்
தலைச்சன் பிள்ளைகளை நரபலி கேட்ட தெய்வங்கள் அன்று,
நாளும், குர்பானியாய் நரபலி கொடுக்கும் மதவெறியர்களோ இன்று

அக நிர்வாணத்தை அறிய ஆதாமின் சந்ததிக்கு புரிதலும்
அறிவுக் கனியுமில்லை, அல்குரானோ, தோராவோ,
விவிலியமோ சொல்லித் தந்த கிளிப்பிள்ளைப் பாடங்கள்,
அன்பை வளர்க்கவில்லை, உண்மை அறிவு கடந்த நிலை





அன்பு இறைவன் வாழ இதயங்களில் இடமில்லை,
மசூதிகளும், தொழுகைக் கூடங்களும், ஆலயங்களும்
வெற்றுச் சடங்கின் அரங்கம், வேதமோ காகிதம்
மனிதனோ மதவெறி பிடித்த மிருகம்

யூதக் கன்னியரும் களம் காணக் கொடிய யுத்தம்
தாய் மண்ணைக் காக்க சிந்தும் இரத்தம்
அன்னையர் அடிவயிற்றிலோ அணையாத் தீ
எரிந்தும் எரியாத முட்செடியில் இறை காட்சி ?
குண்டுத் தீயில் மதவெறியர்களின் மாட்சி


எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-20-02-2024

காதல் விலைமகள்

அவள்

காதல் வேள்வியில் பூத்த பொன் மலர்-கயல் விழிகளில் மையும்
தோகையாய் விரிந்த கார்குழலில் வாச நெய்யும் மணக்க
செவ்வாயில் மலைத்தேன் இனிக்க, ஆடை மூடிய அழகில் பாலாடை
அன்ன நடையில் பூங்கொடியில் வீசும் காதல் வாடை

நர்த்தனமாய் நடையும், கீர்த்தனமாய் கிள்ளை மொழியும்
சீதனமாய் கொண்டவள், நடையோடு கொடியிடையும் அசைந்தாட
ஏழ்மைக் களை எடுக்க-செல்வரிடம், காமக்களை பிடுங்கும் காமினி



இசையோடு கைபேசி அழைக்க, இரவில் மலரும் தேன்நிலவை
மன்மத விருந்துக்கு காமன் அழைக்க, பஞ்சணையில்
பூக்கும் பூவை பாவ புண்ணியம் தாண்டிய
ஆதித்தொழிலிற்கு அர்ச்சனை மலரான பாவை

நெஞ்சினிக்க நேசம் சொல்லாமல்
நிறை அழகை ஏற்றிப் போற்றாமல்
மஞ்சத்தில் கொஞ்சும் மன்மதன்
காமசூத்திரம் அறியாத காமச்செல்வன்

இதழ்களால் மெய்யில் கவிதை எழுதாமல், நுதலில் ஒரு முத்தம்
பதியாமல்அம்மணமான உடலுக்குள் துடிக்கும், ஆன்மாவின்
காதல் புரியாமல் மன்மத கலையின் மகத்துவம் புரியாத
காமுகன் காம சூத்திரம் கல்லாத மூடன், செல்வன்

சீதனத்திற்கு கட்டிய செல்வந்தத் தாலி, ஆடிக்கொரு
தடவை கொறித்திடும் நொருக்குத் தீனி-
வாடகைக்கு எடுத்த பூவையோ நாளும் இனிக்கும்
முக்கனியிலும் இனிய தேன்கனி

கனவும் காதலும், காதல் கடலில் மூழ்கியபோது-உன்
முத்தத்தால் மூச்செடுத்தேன், செவ்வாயில் வாழ்வதென்பதை
உன் செவ்வாயில் அறிந்தேன், காதற் காமம் அறியாது,
காமத்துப்பாலை இரசிக்காது, காமச் சூடு தணிக்கும் மூடன்


அணைத்துக் "கொல்", பெண்மையைப் புரிந்து கொள்
பொன் மேனி உன் ஆடையாக, பூவாசம் உன் சுவாசமாக
என் கனவுகளைத் தென்றலாக்கி என் நரம்புகளை-யாழாய் மீட்டி
என் இதயத் துடிப்பின் இசையை கேள்

யாரும் அறியாத இதயத்துள் நீ மட்டும் நுழைய
என் அந்தரங்கத்தின் பூங் கதவுகளை தாள் திறந்து-
என்னையே உனக்கு நைவேத்தியமாய்ப் படைக்கின்றேன்
சிவமாய் வா, உன் சக்தி நான்

சக்தி எனை உன்னில் ஒரு பாதியாக்கு
லிங்கமாய் நீ -யோனியாய் நான்
சிவசக்தியாய் நாம்-காமமே படைத்தலில்
கடவுளின் பொறிமுறைச் சூத்திரம்

என்னை முழுமையாயக் காட்டிட-எனக்குக் காதல் சொன்னவர் யாருமில்லை
மாதவியாய்ப் பார்த்தவர்களுக்கு. கண்ணகியின் காதல் மனம் தெரியவில்லை-
மெய்யோடு , காதலாகித் துடிக்கும் என் இதயத்தையும் காட்டிட
ஆவலாய் உன்னைக் காதலனாய்த் தெரிந்தேன்

நெருக்கம் என்பது நெருங்கிடும் உடல்களில் இல்லை-நுதலில்
இடும் ஒரு காதல் முத்தம் இதழில் பதித்த ஆயிரம் முத்தங்களைவிட
இனிமையானது-மென்மையானது கண்ணியமானது.
காதல் கண்ணியமான உறவின் தெரிவு, காதல் உண்மையைப் பகிரும் உறவு
உடலும் ஆன்மாவும் கலக்கும் ஆனந்தச் சங்கம நிகழ்வு



பெண்மையின் மனம் குளிர-ஆன்மா மலர,
ஆண்மை இசைக்கும் சங்கீதம் காதல்,
பத்தினியல்ல, பதிவிரதையுமல்ல-காதலுக்காய் ஏங்கும்
பெண்மணி, அர்ச்சனை மலராய் என்னைப் பகிர்கின்றேன்

பகிர்தலே முழுமையாகும் வழி
சத்தியம்- சிவம்- சுந்தரமாய்
சிவசக்தியாய் உண்மைக் காதல் நெறி

வாய்வழி நம் ஆன்மாக்கள் இணைய, என்னை ஆழமாய் முத்தமிடு,
ஆடைகள் இலையுதிர்கால இலைகளாயத் தாமாய் உதிர
ஆழமாய் முத்தமிட்டு என்னுள் வேர் விட்டு, அண்டாளாய்
என்னையே சூடிக்கொடுக்கொடுக்கிறென் கண்ணனாய் ஆட்கொள்

உன்னை நினைந்து உருகும் என் நினைவுகள் இரகசியமாய்
உன்னைக் காதலிக்க, நிராகரித்தல் இன்றி-இரவுகளில்
கனவுகளால் உன்னை தழுவி நெஞ்சம் மகிழ
உன் சொந்தம் நான்-என் சொந்தம் நீ

உடல் தாண்டி, மனம் இணைய, தூரங்கள்
உடலைப் பிரித்தாலும், தொலைவாய்த் தெரிந்தாலும்
இதயங்கள் இணையும் உறவு-காதலர்
நாம் படைத்த எம் பிரபஞ்ச உலகு



இதழ்களால் ஈரமாக்கி-பூவை, என்னைக்
காயாமல் காத்துக்கொள் ஈரமான ரோஜா
என்னைச் சூடி வாடாமல் போர்த்திக்கொள்

அவன்

இதழ் கொண்டு இவளை அளக்க முயன்றேன்
முடிவில் எனை மறந்தே , இன்பக்கடலில் மூழ்கிப்போனேன்.
அம்மணமாய் காதல் சுரத்தில் வாடும் பெண்மைக்கு
காதல் நெய்தே, சிவமே ஆடையானேன்,

என்னில் பாதியான உமையாய் அவள்
கைலையில்- காதல் நர்த்தனம் ஆடும்
சிவசக்தியாய் நாம்

<u>அவளும்</u>

அந்தியில் மலர்ந்து-அதிகாலையில் உதிரும் அந்திமந்தாரை
காமனின், அர்த்தஜாம பூஜையின் செந்தாமரை
காதலுக்கு அர்சனை மலரான பாவை ?

<u>அவள் நிலை</u>


முத்தமழை பொழிந்து காதல் சொல்லாமல்
மோகனம் செதுக்கிய பொற்சிலையை இரசிக்காமல்
கட்டுடல் தழுவி சுருதி சேர்த்து மன்மத ராகம் இசைக்காமல்
கயல்விழி பார்த்து-கவிதை சொல்லாத காமம், பாவம்

காமனை அழைத்து காதல் வேள்வி செய்யாமல்
உச்சம் காணாமல், ஒரு சிகரம் தொடாமல்
கலிங்கம் உரித்து-காமம் விதைக்கும்
காமக்காரனின் விதை நிலமாய்ப் பெண்மை

நாளும் துச்சாதனர்க்கு-பொன்னுக்காய் துகிலுரியும்
திரௌபதி, மதுகாரிக்கு இதழ்விரித்த பூக்காரி
இதழமுதம் பருகி, இவளமுதம் எனச் சொல்ல-
நெஞ்சில் காதல் இல்லை
காதலாகி மெய் கொண்டு-மெய் கடைந்து
பேரின்பம் காண காமத்துக்கு வரமில்லை-

அன்பினால் கட்டித் தழுவி ஆடையாய் மூடிக்கொள்ள-
காமனுக்கோ இதயத்தில் காதல் கரங்களில்லை
அணைக்க அணைக்க வளரும்-காதல் தீ
அணைக்க அணைக்க அணையும்-காமத் தீ

பணம் படைத்த உலகில்-
காதல் மனம் தேடும் பெண்மை
பொன்மானைத் தேடிய சீதையின் மென்மை



பூவாய் நான் மலர-என்னில் வேரூண்டு
கனியாய் எனை உண்டு காதல் பசியாறு
ஈர மண் என்னில் காதல் விதை தூவு
காதலாகி பூக்கின்றேன்-காதலனாய்
என்னை இதயத்தில் சூடிக்கொள்

காமத் தீ மிதிக்கும் பக்தனாய் நீ மாறு-பூ மிதிப்பிற்காய்
இதழ்விரிக்கும் பூவையாய் நான் மாறி
ஆடை களைந்து-கொக்கி கழற்றி, அம்மணமாய்-
அழகாய்-அம்மனாய் தரிசனம் தருகின்றேன்
தேவி தரிசனம் எனக் கூறு

அவலம்

உழுது களைத்த உடல் ஒதுங்க, உருவில்லாத் துயர் மலையாய்
மனதை நொருக்க-அழகால் செதுக்கி, அழுகையால் முகம் துடைக்க
விதி செய்தான் -விலை மாதாய் சதி செய்தான் பிரம்மன்

கவிதையல்ல வாழ்வு, களிப்பும், கண்ணீரும், சிலுவையும்
கலந்த கலப்படம், நிஜங்களைவிட நிழல்களும்
மலர்களை விட, முட்களும் மலிந்த உலகில்-நீரில் மூழ்காத
தாமரை- நித்தம் கண்ணீரில் மூழ்கிடும் அந்தி மந்தாரை

நிந்தனை வந்தனை தாண்டி-நித்தம் நிர்மலமாய்ப் பூத்து
கண்ணில் நீர் வடிய கன்னி உதிர்வாள்
இறைதாள் உள்ளத்தில் பதிய
இன்னோர் மரிய மதலேனாய் பெண்ணாள்

கண்ணீர் பூச்சரம் கால்களை கழுவிட
கவிதைப் பூச்சரம் இறைவனைத் தொழுதுதிட
விலைமாதாய் இவள் வாழ்வு
சம்போகத்தில் நாளும் இவள் சாவு

கொழுகொம்பில்லாப் பூங்கொடி, சூறாவளியில் ஆடும் காற்றாடி
சத்தியம்-சிவம்- சுந்தரம், சிவனை மனம் உருகிப் பாட-
சிவனுக்காய் தவமிருக்கும் தேவி, சிறையிருப்பதோ
சோகவனம்-காதலில்லா வாழ்வோ வரண்ட பாலைவனம்


மெய் கொண்டு மெய் தின்று, பெண்ணின்பம் தேடும் உலகில்
பெண்களே விபச்சாரி என்பது வேடிக்கை
நாளும் கற்பழிப்பும் வன்முறையும் ஆண்களின் கேலிக்கை
பெண்பாவம் தீராத பாவம்-காமுகனே
உன் தாயும் பெண் என்பது நீ அறியாத சாபம்.



நீ வந்த யோனி நொந்து பெற்றது உன்னை
காமுகனாய் நீ உழுத யோனி-நொந்தே
பாவி எனச் சாபமிட்டதும் உன்னை
வன்புணர்வு வேண்டாம்-காதலே நல் உறவு
அன்பே சிவம்

நாளும் அம்பு தைக்கும் விலைமகள் இதயத்தில்
ஏழு வண்ணங்கள் தாண்டிய வானவில்லின் வணணத் துயரங்கள்
ஏழு ஸ்வரங்களை கடந்த அபூர்வ ராகங்களாய்
தனிமையில் பெண்மையின் அழுகைகள்,

கஜீராகு சிற்பத்திலும் அழகாய்,
அம்மணத்திலும்-ஆடையிலும்
அவள் காதல் கோலங்கள்



பள்ளியறைக்கோலங்களை-, புள்ளி மயில்-ஏழ்மையால்
பாதையில் போட்டாள்- வெள்ளி நிலவோ-
இரசிகன் யாருமின்றி-
கட்டில் காட்டில் காய்ந்தே தேய்ந்தாள்

காமத்திற்கு சூத்திரம் வகுத்து, கஜீராகு சிற்பங்கள் வடித்து
காதற் காமத்தை கலையைப் போற்றிய உலகில்
காதல் உயர்ந்த கலை, கற்றவர் இரசித்தார்-மற்றவரோ
இந்திரனாயச், சந்திரனாய், யயாதியாய் அலைந்தார்

எல்லாப் புகழும் இறைவனுக்கே
இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
PaPax Ravichandra-4-08-2023

கூடார வாசிகள்





கனக்கும் இதயம் சோகத்தால் நிறைய
கண்ணில் நீர் வடிய, மண்ணில் உறவுகள் புதைய,
அகதிகளின் **ஆறாம் தொழுகை**-ஆறாத சோகத்தில்
அல்லாவை எழுப்பும் அழுகை

காற்றில் கிழிந்து, கடும் குளிரில் நடுங்கி
வெயிலில் காய்ந்து, மழையில் நனைந்து-பாலையில்
சிதறிக்கிடக்கும் பல்லாயிரம் கூடாரங்களில்
புன்னகை மறந்த அகதிகள்

தீராத யுத்தத்தின் ஆறாத இரணங்கள்
அகதிகள் இதயத்தை வருத்த- காயாத
காயீனின் இரத்தத்தில் -அல்லாவை
எழுப்பிடும் ஓயாத கூப்பாடுகள்

அரைவயிற்றுக் கஞ்சி உணவாக, கண்ணீரில் வுழு செய்து-
அல்லாவை தொழும் கோலம் வாழ்வாக-கண்ணிற்குப்
புலப்படாத காலன் கொரோனாவின் காலடித்தடங்கள்
எட்டும் துாரத்தில் ஏழைகளின் கூடாரங்கள்

நீருக்கும், சவர்க்காரத்திற்கும், நித்தம் கையேந்தும் அகதி வாழ்வில்
கைககழுவுதலும், தனிமைப்படுத்தலும்-வல்ல அல்லாவின்
வல்லமைக்கும் சவாலாக, செஞ்சிலுவை சங்கத்தின் தோள்களில்
இயேசுவும் சுமக்காத பெருஞ்சிலுவை





யுத்த பூமியெங்கும் சிந்திய இரத்தம் காயமுன்
காலனின் புதிய அவதாரமாய்
இரத்தமின்றி, சத்தமின்றி உயிர் பறிக்கும்
கொரோனாவின் அச்சுறுத்தல்கள்

யுத்தமோ, மதப்பயங்கரவாதம்-கொரோனாவோ
அன்று பார்வோனை அச்சுறுத்திய -இன்று
மானுடத்தை மனந்திரும்பிட அழைத்திடும்
வல்ல யாவேயின் புதிய ஆயதமோ?
மானுடமே மனந்திரும்பு

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-21-06-2023

மந்திரியும், மகா அசோகரும்





ஆறாய் இரத்தம் சிந்திய அகோர யுத்தம் ஓய்ந்த
அந்திப் பொழுது, வெற்றிக் கொடி உச்சத்தில் பறக்க
ஒப்பாரி, அழுகையை மறைக்கும், வெற்றி ஆரவாரம்
கனக்கும் மன்னன் மனதில் சஞ்சலத்தின் சஞ்சாரம்

கையிழந்து, கால் இழந்து. கண் இழந்து, தலையிழந்த
முண்டங்களாய் பல்லாயிரம் வீரர் வீழ்ந்த களத்தில்-
விதவைகளின் அழுகைச் சத்தம், பிணந்தின்னிக் கழுகுகள்
ஆர்ப்பரித்து இறங்க, நாய், நரிகளின் ஊளைச் சத்தம்

ஆயிரமாயிரம் உடலங்கள் ஆகுதியாய் கருகி எரிய,
வீசு தென்றலில் கருகும் பிணவாடை மணக்க
ஈர மண்ணில் காயாத குருதியின் வாடை, களத்தில்
நடந்த மன்னன் மனதில் தீராத சோகத்தின் ஜாடை



மனிதத்தை அழித்து, மாங்கல்யத்தைப் அறுத்து
கண்ணீர்க் கடலின் அணையுடைத்து, மண்மேடான
தேசத்தில் அசைந்தாடிப் பறக்கும் மகா அசோகரின்
வெற்றி கொடி, மனதிலோ சூனியத்தின் நெடி



புத்தம் சரணம் கச்சாமி, தம்மம் சரணம்
கச்சாமி, சங்கம் சரணம் கச்சாமி, ஓதி
நடந்து ஒவ்வொரு பிணத்தையும் ஆசீர்வதித்த
துறவியின் மனதிலோ கலக்கம்.

ஒளிரும் தீயில் சீவர ஆடை செந்தீயாய் மனதை எரிக்க,
சாந்த சொரூபியாய் வெற்றி, தோல்வி கடந்து,
வேதனையில் வாடும் உள்ளங்களைத் தேற்றிடும் துறவி
மாமன்னரிலும் மகத்தான பிறவி-வியந்த அசோகன்

யுத்தம் கற்றுத் தந்த பாடத்தை கற்றாயா?
குருதியிலும், கண்ணீரிலும் கிடைப்பதும் வெற்றியா?
உனக்கு கிட்டியது வெற்றியா? சாந்தியா மன்னவா?
தொடுத்த கேள்விகளால் துவண்ட மா மன்னன்

பகைமையைப் பகைமையால் தணிக்க முடியாது, பகைமையை,
அன்பினால் தணியுங்கள், வென்றவர் மகிழ்ந்திருக்க, தோற்றவர்
அழுது புலம்பிட, ஆறாதது வெஞ்சினம், அன்பினால் மனங்களை
வென்று பகைமையை ஒழியுங்கள், அமைதி உங்கள் சொந்தம்

புத்த தர்மத்தை பின்பற்றி, தீமையை
வெல்லுங்கள், அமைதியோ தர்மத்தின் பரிசு
யுத்த வெற்றியோ சினத்தின் வாரிசு

தோற்றவன் பகைமை தணிவதில்லை,
வென்றவன் வெற்றி என்றும் நிலைப்பதில்லை
வரலாறு கற்றுத் தரும் பாடங்கள்-கருணா மூர்த்தி
பகவான் புத்தரைச் சரணடையுங்கள்





மனம் மாறிய மகா அசோகன் மனதிலே சாந்தி,
பரந்து விரிந்த மகாத்தான அரசெங்கும்
தம்மத்தின் ஆட்சி, போதியின் நிழலில் அமைதி
தவழ்ந்திட, மக்கள் மனதில் நிம்மதிப் பெருமூச்சு

அரியணையில் மா மன்னன் அமர்ந்திருக்க
அவைக்கு வந்த பௌத்த துறவி அசோகரை
வாழ்த்திட, முடி மண்டியிட சிரம் தாழ்த்தி
துறவியின் திருவடி பணிந்த மன்னன்.

மா மன்னன் பௌத்த துறவியின் பாதங்களைத்
தொழுவதா? நோக்கிய மந்திரி கண்களில் கோபம்,
துறவிக்கு வேந்தனும் துரும்பா? நெஞ்சிலே தாபம்
கடைக்கண் நோக்கிய காவலன் மனதிலே சோகம்.





மறு நாள் மந்திரிக்கு அழைப்பு வந்தது
மன்னர் தந்தார் இந்தப் பையை, உள்ளதை
சந்தையில் விற்று, பொன்னை கருவூலத்தில்
சேர்த்த பின் என்னைச் சந்திக்க வருக

சந்தைக்குச் சென்று பையைத் திறந்த மந்திரிக்கு
அதிர்ச்சி, ஆட்டுத் தலை, புலித் தலை,
மனிதத் தலை மந்திரியைப் பார்த்து நகைத்திட
மதியூகி கடை விரித்தார் சந்தையில் விற்றிட

ஆட்டுத்தலையை வாங்கிச் சென்றான் ஒருவன்,
மதியத்தில் வந்த வேடன் புலித் தலையைப் பாடம்
செய்து பெரு விலைக்கு விற்கலாம், வாங்கிச் சென்றான்
மனிதத் தலையோ தேடுவாரற்று நாறியது

மாலையும். வந்தது, சந்தை கலையும் நேரம் நெருங்கிட
மன்னவனுக்குச் சேதி அனுப்பி, காத்திருந்த மந்திரிக்கு,
தலையை இலவசமாக அளித்து விடுங்கள் கட்டளை வந்தது

இலவசம், மனிதத் தலை இலவசம், கூவி அழைத்தும்
கூட்டம் வரவில்லை, கேலியாய் நகைத்த கூட்டம்
நாறும் தலையை விலக்கி நடக்க. சந்தை கலையும்
நேரத்தில் சங்கதி வந்தது மகா அசோகரிடமிருந்து

தலையை உரிய முறையில் புதைத்து விட்டு, நீராடி வந்து
சந்தியுங்கள், நீராடி வந்த மந்திரி நெஞ்சிலே
பெருஞ் சோகம், மன்னகைக் காண மனதிலே நாணம்



ஆடு, புலியின் தலைகளுக்குப் பெறுமதி உண்டு,
மாண்டபின் மன்னாளும் மாமன்னன் தலையானாலும்
உலகில் வாங்கிட மனிதர் உண்டோ?



முடி தரித்த தலை, முடி மழித்த துறவியின் பாதங்களை
பணிந்த தொழுதபோது, இந்தத் தலை, அந்தத் தலையை
மண்டியிட்டு தொழுவதா எனக் கொதித்த உம்தன் தலை
மாண்டபின் மனிதத் தலையின் பெறுமதியை இன்று
அறிந்தது, கர்வம் கலைந்தது, இதுதான் உலகு

முடி சார்ந்த மன்னரும் முடிவில் பிடி சாம்பலாவர்,
மண்ணில் புதைந்தோ, தீயில் எரிந்தோ உடல்
மறையும், மனதில் நினைவழியும், ஆணவம் கழித்த
மனம் அறவோரைத் தொழும், அதுவே அறம்.



மன்னவன் ஆட்சிக்கும் முடிவுண்டு, அறத்தின்
ஆட்சி நிலைத்தால் உலகில் அமைதியுண்டு
அமைதியின் தூதர் பௌத்த துறவி, அன்னாரை
வணங்கிப் போற்றுவது தர்மத்தின் நியதி


பற்றறுத்தவர் இராட்சியம் அவர் உள்ளமே, மனதை வென்றவரே
மா மன்னர், பற்றியாளும் மண்ணும். பொன்னும் அரசல்ல
தூய மனமே பேரரசு- வணங்குதல் நற்பேறே-புரிந்த மந்திரி
போற்றினார் மன்னர் திலகம் மகா அசோகர் வாழ்க!. வாழ்கவே


மண் வென்ற மா மன்னருண்டு, மண்ணோடு
மக்கள் மனம் வென்ற மன்னன் மகா அசோகரே உண்டு
பௌத்தம் தழுவி பாவம் களைந்த புத்த வாரிசு
யாம் பெற்ற இன்பம் பெறுக வையகம் என்றே
உலகெங்கும் பௌத்தத்தை பரப்பிய ஞான முரசு

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-14-02-2024

மைத்திரேய புத்தர்

தொழுவத்தில் பிறந்த, அன்பு, கருணையின் உருவகம், எளிமையின்
வடிவம், நாடோடிப் போதகனாய் ஊர்கள் தோறும்
நற்செய்தி இயம்பிய மாதவன்-வதைப்போரையும் மன்னித்து
சிலுவையில் கிறிஸ்துவாய் மலர்ந்த மைத்திரேய புத்தன்





எளிய மனத்தோருக்கு இறையரசு, தூய மனத்தோருக்கு
சத்திய தரிசனம் நிதரிசனமானது, உள்ளுணர்வின்
உன்னதத்தில் இருப்போடு ஒன்றாகி
முதற்பேறான மகனாகும் பேறு வரமானது

மனுமகன் இயேசு மைத்திரேய புத்தரின் அவதாரம்
மனுக்குலத்திற்கு இறைவனின் அளப்பெரிய ஆசீர்வாதம்,
விழிப்புணர்வெனும் பெருங்கடலில் தோன்றிய பேரலை,
அறிந்தால் உள்ளுணர்வின் உன்னதமாய் நம் நிலை


புத்த பெருமானுக்குப் போதி மரம்
மைத்திரேய பெருமானுக்குச் சிலுவை மரம்
அமைதியில்லாத மனமோ பட்ட மரம்
ஆணவம் கழித்த மனமோ உன்னதம்






குழந்தைகளை என்னிடம் வரவிடுங்கள்-
இன்றும் இயேசுபெருமானின் அழைப்பு,
குழந்தைகளின் சிரிப்பில் இறைவனின் இருப்பு,
நல்மனங்களில் அமைதியின் பூரிப்பு

யுத்த பூமியெங்கும் குழந்தைகளின் அழுகைச் சத்தம்,
பெத்லேகம் தாய்களின் ஓயாத ஒப்பாரிச் சத்தம்,
இன்றும் அன்னை மரியாளின் இதயத்தில் இரத்தம்,
அமைதியைக் கொல்ல நடத்திடும் யுத்தம்




ஏலி ஏலி லமா சபக்தானி-குழந்தை
இயேசுவின் அழுகைச் சத்தம்-இதயத்தை
குத்தி திறந்த ஈட்டியிலே இரத்தம்
உலகெங்கும் குண்டுச் சத்தம்



உன்னதங்களில் இறைவனுக்கு மகிமை-பூவுலகில்
நல்மனத்தவருக்கு அமைதி, நல் மனமே
பாலும் தேனும் ஓடும் வாக்களிக்கப்பட்ட பூமி,
தன்னுள் கண்டவனோ சாமி


வாழ்வு ஒரு அகமுகப் பயணம், தன்னுள்
நுழைந்து தன்னை அறியும் தீர்த்த யாத்திரை
இருப்பு என்னும் பெருங்கடலில் எழுந்த பேரலை-கிறிஸ்து
வாழ்வில் அலையும், கடலும் ஒன்று என்ற திருநிலை






புத்தரை வழியில் கண்டால் கொல்லுங்கள்
புத்த நிலை நம்முள்ளே- உள்ளுணர்வில் மலர்ந்தால்
நாமும் பெருமான் புத்தரே, இயேசு கிறிஸ்துவே
வாழ்ந்தறியும் உண்மையே சத்திய தரிசனம்


அன்பு மனங்களில் வாழும் இறைவன்
கள்வர் குகையான ஆலயங்களில் வாழ்வதில்லை-
கள்வர் குகையான ஆலயங்கள்-கல்லின் மேல்
கல் இராதபடி இடிக்கப்படும் பொய்ப்பதில்லை






மானுடத்தைப் பிரிக்கும் மதங்களைக் கடந்து
அன்பு இறைவனைத் தேடுங்கள், அன்பு
மனங்களில் வாழும் இறைவன் நம்மில் மலர,
அமைதியின் தூதர்களாய் மாறுங்கள்

அன்பைப் பகிர்ந்து இன்புற்றால் உலகில்
அமைதி நிலவும், துன்புறும் அயலானில்
இறைவனைக் கண்டு துயர் துடைத்தால்
இன்பம் பெருகும், வாழ்வு தெய்வீகமாகும்



நம்பிக்கை இரவலானது, வாழ்ந்தறியும்
உண்மை நம் சொந்தமானது- இறைவன்
நம்பிக்கையல்ல வாழ்ந்தறியும் சத்தியம்
அன்பே பாதை உண்மையே விளக்கு



ஏழை, பாவி, ஆயக்காரன், விபச்சாரிகளோடு
உண்டு குடித்து, உறவு கொண்டாடி-இறையரசு
எளிய மனத்தவருக்கே இயம்பிய பெருமான்-தம்மை
வதைப்போரையும் மன்னிக்க தந்தையிடம் வேண்டி
வாழ்வும், போதனையும் ஒன்றான அம்மான்

உனக்கு நீயே ஒளியாகிப் போ
உன் ஒளி ஒளிர்வதாக



இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-25-12-2023

நான்காம் மலம்



வைகறையில் எழுந்து மலவண்டியோடு ஊர்வலம் வந்து,
வீடுகளில் மலமள்ளி, காட்டில் புதைத்து, ஆற்றில்
வாளிகளைக் கழுவி, தெருக்குழாயில் தம்மைக் கழுவும்
ஏழைகள், கஞ்சும், கூழும் குடித்து வாழும் மனிதர்கள்




செருப்பு தைத்து-தூண்டில் போட்டு, சாக்கடை
துப்புரவாக்கிக் கிடைத்த காசை-மாலையில்
கனத்த மனம் காற்றாய் மாறிட குடும்பத்தோடு
கள்ளுண்டு களித்து, இழிபிறப்பை பழித்து புலம்பியழும்
எளியவர் வாழ்வில் விடியல் ஏது?

ஒரு துண்டு பீடியை ஒன்றாய்ப் புகைத்து
நட்பை வளர்த்தோம், ஒரு வெற்றிலையை
நான்காயப் பங்குபோட்டு
ஒரு சாண் வயிற்றின் பசியை மறந்தோம்

மும்மலம் கடந்த வேதியர் மலமும் -எம் மலம்போல் நாறி
மூக்கைப் பிடுங்கிட, சாதியம் பேசும் உயர் சாதி குருதியும்-
எம் குருதியும், ஒரே சிவப்பு நிறத்தை காட்டிட-தீண்டாமை
ஏனோ? சூத்திரன் எனச் சூட்டுக்குறியும் எதற்கோ?

சந்தணமாய் வேதியர் மலம் மணக்கவில்லை-
வெள்ளாளர் குருதியும்-சிவப்பைத் தவிர
வேறு நிறம் காட்டவில்லை



உழைக்கும் ஏழை எம் குருதியும் சிவப்பே
ஒழுகும் சலத்திலும் கழிக்கும் மலத்திலும்
மணப்பது ஒரே துர்நாற்றமே

செய்யும் தொழிலே தெய்வம் என்பது
சூத்திரருக்கு சொன்ன மந்திரமோ?
சூத்திரன் நிழல் பட்டாலும் தீட்டு என்பது
ஆதி சங்கரர் வரட்டுத் தத்துவமோ?

விடியல் இல்லா வாழ்வில் விடியலாய்க்
குழி கக்கூஸ் வந்திட
மலம் அள்ளும் தொழிலும் ஒழித்து
மனிதனாய் நடந்திட எழுந்தோம்

வழியெங்கும் முள்ளாய் சாதியத் தடைகள்
கழுவியும் போகாத-சதையில் இட்ட
சக்கிலியன் என்னும் சூட்டுக்குறிகள்

மும்மலங்களை கழித்தவர் –வேதியராய்
மோட்சம் கண்டார்-நாறி மணக்கும்
மனித மலத்தை நாளும் சுத்தம் செய்தவர்
நரகில் வாழும் சக்கிலியராய் இழிவு கொண்டார்



கங்கையில் குளித்தாலும் தீராத தீட்டாய்,
ஆணவம், கன்மம், மாயை கடந்த நான்காம்
மலமாய் -சாதியம்?, சாதியம் கடந்தவருக்கே
சத்தியம் நீதியாவது (அ)சாத்தியமே?

மூப்பும், பிணியும், சாவும் மாறாத வாழ்வில்
பசியும், பட்டினியும் என்றும் ஏழை எம் சொந்தம்,
தர்மம் அறிந்தவருக்கு சாதியமில்லை
அன்பு இறைவனுக்கு நாம் பிள்ளைகள்

வாயில் தோன்றிய பிராமணனும், கையில் தோன்றிய
-க்ஷத்திரியனும், தொடையில் தோன்றிய- வைசியனும்
பாதங்களில் தோன்றிய- சூத்திரனுமாய்
போலிச் சாத்திரங்கள்



அரியணை அமர்ந்ததும் **ஸ்ரீராமன்** பாதணிகளே-
துதி பாடிக் , கூப்பிய கரங்களோடு
தொட்டு வணங்குவதும்-பெரியோர் பாதங்களே
“சூத்திர வடிவத்தையே”

இறைவன் திருவடி பட்ட மண்ணே திருத்தலம்
கல்லான உள்ளங்களில் கறைபடிந்த சாதியம்
ஒன்றே குலம் ஒருவனே தேவன்
மூத்த குடி மொழிந்த சத்தியம்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-19-05-2023

ஓம்ரான் - Omran Daqneesh

வான் தாக்குதலால் வாழிடங்கள் இடிந்து வீழ்ந்திட
வாழ்வு தந்த பெற்றோர் அகால மரணமடைந்திட
இடிபாடுகளுக்கிடையில் அநாதையாய்-அலெப்போ நகரில்
உயிர் பிழைத்த ஐந்து வயதுச் சிறுவன் ஓம்ரான்.




புழுதி படிந்த தேகமும், குருதி வடியும் முகமும்-குழந்தை இயேசுவை
சிலுவையில் அறைந்த நிலை சொல்ல, அழுகையின்றிக், அச்சமின்றி
பிஞ்சுக் கைகளால் கலைந்த கேசத்தை ஒதுக்கி, வடியும் குருதியைத்
துடைத்துப். பார்க்கும் பார்வையில் வெட்கித் தலைகுனிந்த மனிதம்?

உறங்கிக் கிடந்த யுத்தவெறியரின், மனச்சாட்சிகளை
சுட்டுப் புடம்போட்டு, அண்ணக அமைதிப்
பிரியர்களை , அநுதாபத்தோடு நோக்கிய விழிகளில்
கண்ணீர் இல்லை-கலக்கமும் இல்லை



கல்மனங்களைக் கண்டு கலங்காத குழந்தை உள்ளம்
கண்ணீர், குருதி கண்டும் மனம் மாறாத அரக்கர் உலகம்
அமைதியைப் பழித்து, பூமி அதிரக் குண்டுகள் ஒலிக்கும்
மரணமும், அழிவும் ஓயாது தொடர
அநாதை, விதவை, அகதிச் சந்ததி பெருகும்


பகைமையைப் பகைமையால் வெல்ல முடியாது
பகைமையை அன்பினாலேயே தணிக்க முடியும்
அறிந்தும், ஆணவத்தால் ஒழுக இயலாத அவலம்
தூய மனத்தவருக்கே சத்திய தரிசனம்



எவ்வுயிரையும் தம்முயிர்போல் நேசிக்கும்
புத்த மனம், இயேசு மனம் நம் உள்ளே
உள்ளுணர்வின் உன்னதமே தூய மனம்
நல் மனத்தவருக்கே அமைதி

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-07-10-2023

ஒரு பிடி கடுகு–கிஸ்ஸ கோதமி





மொழியில் வடிக்க அழகோ காவியம்-காதலாகி
நெஞ்சில் எழுத வண்ண ஓவியம்- காளையர் நெஞ்சை
வருத்தும் காமனின் மோகனாஸ்திரம்-கண்டவர்
நெஞ்சிலே தைக்கும் காதலின் பிரம்மாஸ்திரம்

அங்கமெல்லாம் அழகு ஜொலிக்க
மங்கையோ பூத்த புதுப்பங்கயம்-ஆனிப்
பொன்மேனியில் மல்லிகையின் நறுமணம்
காதல் வசந்தமோ அழகின் இலக்கணம்

வட்ட நிலவிற்குப் பொட்டு வைத்து
வாச முல்லையை கார் குழலில் படரவிட்டு -குமுதச்
செவ்வாயில் அமுத மொழி வைத்த அழகு,
செல்வத் தந்தையின் ஒரே வண்ண நிலவு



பூ விழிகள் மலர, புன்னகையில் முத்துக்கள் ஒளிரக்,
நாணிடும் செங்கன்னங்களோ கிண்ணம் பழம்,
கண்டு காதலில் விழுந்து கவிபாடும் -ஏழைக்
காளை நெஞ்சில் காதலின் வசந்தோற்சவம்

மொழியில் குயிலாகி, நடையில் அன்னமாகி
சாயலில் தோகையாகி, மனம் சூட காதல்
மல்லிகையான மங்கையின் மைவிழிகள்
காளை நெஞ்சில் எழுதியதோ காதல் கவிதை



கட்டழகுக் காளையோ தந்தையின் கூலியாள்
கண் பார்த்து நெஞ்செழுதிய காதலோ ஓவியம்,
ஏழை, செல்வன் நிலை கடந்து இரு மனம் ஒப்பிட
எழுதியதோ அன்புக் காவியம்

இரவெல்லாம் விழித்திருந்தேன்-இதயத்தை
உன் இன்பக் கனவுகளால் நிறைத்திருந்தேன்
நினைவெல்வாம் தேனாக, காணும் காட்சி எல்லாம்
உனதாக, கண்ணாளா காதலின் மாட்சி கண்டேன்

என் மெய்யிலோ நாணத்தின் வண்ணம், மீட்கும்
என் வீணையிலோ இன்னிசை வெள்ளம்- உன்னை எண்ணிட
கலை மானாய்த் துள்ளும் மெல்லிடையாள் உள்ளம்

காதலோ அன்பின் புது வரவு, இளமை ஊஞ்சலாடும்
இரு மனங்கவர்ந்த இன்ப உறவு, இல்லறத்தில்
நின்று, இன்பத்தில் துய்த்திட, செல்வத் தந்தையைத்
துறந்து கண் மறைந்த காதலர் உலகு






கண் வழி நுழைந்து நெஞ்சில் விழுந்த காதல்
நெஞ்சைக் கொள்ளை கொள்ள, பெருஞ்செல்வத்தை
துச்சமென மதித்து, காதலனோடு கண் மறைந்த கன்னி,
தந்தையின் நெஞ்சை சுக்கு நூறாக்கிய சோக நிலக்கண்ணி

தந்தையின் ஆசைக் கனவுகள் காற்றோடு கலந்திட
சிந்தையைச் சோகக் கறையான்கள் அரித்திட
மனம் நொந்து நோயில் விழுந்தும்,
நொந்தும் மகளைக் கடியாத அன்புத் தந்தை

கரை கடந்து அக்கரையில் கூடுகட்டிய
சோடிக் கிளிகள், கால வெள்ளத்தில்-குஞ்சுகள்
இரண்டை ஈன்ற கோலமயில்கள்


பட்டாடை உடுத்தி, பணியாட்கள் ஏவலுக்கு காத்திருக்க
நாளும் அறுசுவையோடு நல்லுணவு உண்டு, மாட
மாளிகையில் மலர் மஞ்சத்தில் உறங்கி எழுந்த ராணியான
வாழ்வு, காதலுக்காய் ஏழ்மை பூண்ட நிகழ்வு





ஓலைக் குடிலில், ஒரு பாயில் இருவர் உறங்கி,
பசி வரப் பழஞ்சோறுண்டு-எளிமையான வாழ்வில்
இதயம் நிறைத்த காதல் செல்வத்தைப் பரிகசித்தது

வறுமைப் புயல் வாட்டிடும் வாழ்வில்
மாறாத வசந்தமாய் நிலைத்த காதல்
பொறுமையை அணிகலனாய்ப் பூண்ட மங்கை
இல்லறத்தை நல்லறமாக்கிய அம்மை



கடும் புயலோடு பெருமழை பெய்ய
ஊரெங்கும் பெருவெள்ளம், வாழ்ந்த குடிலும்
காற்றோட போயிட, உடுத்த கந்தையோடு
தந்தையைத் தேடிய பந்தம்

மனைவி குழந்தைகளோடு கணவன் வழி காட்ட
அக்கரை சேர்ந்தால் அன்புத் தந்தையிடம்
அடைக்கலம், தந்தையை நாடிய பயணம்
தம் துயர் தீரும் மங்கையின் மனதிலே ஆனந்தம்

கொட்டும் மழையில் மனைவி குழந்தைகளை பாதுகாப்பாய்
இருக்க வைத்து, நதிக்கரை நாடிச் சென்ற துணைவன்,
நாழிகைகள் செல்ல, பதறித் தேடி வந்த தலைவி காண
அரவம் தீண்டி பிணமாய்க் கிடந்த அன்புக் கணவன்



பருவத்தில் வந்த காதல் வசந்தம்-தந்தைப்
பாசத்தை மறைக்க, அழகன் உருவத்தில்
உள்ளம் கொண்ட காதலை காலன் -அரவமாய்
மாறிப் பறிக்க, விக்கித்து நின்ற பேதை



சொல்லி மாளாத் துயரம் பூ நெஞ்சைக் கொல்ல,
பந்தமாய் வந்த உறவு பாதியில் அநாதையாய் மடிய
பிள்ளைகளை மார்போடணைத்து அழுத அன்னை

மாண்ட கணவன் உடலை புதைத்து, மாறாச் சோகத்தை
நெஞ்சில் விதைத்து, மகவோடும், மகனோடும்
நதிக்கரை நாடிய அன்னை விழிகளிலோ வற்றாத கங்கை




வெள்ளம் வடிந்து நதி ஓட, நெஞ்சில் சோக வெள்ளம் பெருகி ஓட,
கரையில் மகனை இருத்தி, மகவோடு அக்கரை சேர்ந்த அன்னை
குழந்தையை பாதுகாப்பாய் ஓரிடம் வைத்து, மகனை
அழைத்து வர, மறுகரை நாடி நதி கடக்கும் விதவை

பாதி நதி கடந்தவள் பார்வையில்-பச்சிலம் குழந்தையை
வட்டமிடும் கழுகுக் கூட்டம், உயிர் பதற, உள்ளம் நடுங்க
மேனி சிலிர்க்க, கைகளை அசைத்து கத்திக், கதறி விரட்டி
நடாற்றில் செய்வதறியாது நின்ற அபலை

அன்னையின் கையசைப்பில் அம்மா அழைக்கிறாள்
என்றெண்ணி நதியில் இறங்கிய சிறுவன், ஓடிடும் கங்கை
உறவைக் களவாடிச் செல்ல, உறங்கிய குழந்தையை
கழுகுக் கூட்டம் உணவாய்க் கொள்ள பதறிய தாய்மை





கங்கை இழுத்துச் செல்லும் மகனைக் காப்பதோ,
கழுகுகள் கொத்தும் குழந்தையை மீட்பதா?
கண்ணில் நீர் எழுதிக் கலங்கிய தாய்மை
விண் வாழ் தெய்வங்களை வேண்டிய பெண்மை

ஓடித் துரத்த குழந்தையின் பிஞ்சு உடலை
கொத்திக் குதறிக் கவ்விச் சென்ற கழுகுக் கூட்டம்
கரையெங்கும் ஓடித் தேடி, ஒதுங்கிய மகனுடலைத்
தேடிக் கண்ட தாயுள்ளத்திலோ சூனியம்

மடிந்த மகனை மார்பில் சுமந்து, இமயச் சோகத்தை
நெஞ்சில் சுமந்து, கண்ணீரும் கம்பலையுமாய்
இட்ட அடி நோக, எடுத்த அடி தள்ளாட
ஊர் வந்த மங்கை கண்களிலோ வற்றாத கங்கை





நங்கை உற்ற துயரைச் சொல்ல வார்த்தையில்லை,
கைமை பூண்ட மங்கை, கணத்தில் பிள்ளைகளைப்
பறிகொடுத்து, பித்தாகி, கரையேறிய பேதை


விழிகளில் கங்கையின் ஈரம்-நெஞ்சிலே சோக
காங்கையின் வெப்பம், கதறினாள், பதறினாள்
மண்ணில் விழுந்தழுதாள், தெய்வங்களைக்
கூவியழைத்தும் தேறுதல் காணாத அம்மை

நெஞ்சம் எரிமலையாய்ப் பொங்க நேசனை நினைந்தழுதாள்,
பெற்ற வயிறு பற்றி எரியப் பிள்ளைச் செல்வங்களை எண்ணி
அழுதாள், தந்தையை நாடியவளுக்கு, தாயுமானவன் மரித்த சேதி
இடியாய்த் தாக்கிட இருதலைக் கொள்ளி எறும்பாய் செல்வி

பெற்ற தாயிலும் மேலாய் நேசித்த தந்தையை
புயல் வீழ்த்திட, மாட மாளிகையும் மண் மேடாகிட,
அப்பா, அப்பா என மார்பறைந்து புலம்பியழுதாள்
மகளும், மனைவியும், தாயுமானவள்



இரு மனம் கலந்திடப் பூத்த காதல் நந்தவனம்
காதல் மனங்களில் நாளும் ஆனந்த நறுமணம்
பிள்ளைச் செல்வங்களால் வாழ்வோ இன்பவனம்-இன்று
எல்லாமிழந்த அன்னையின் வாழ்வோ பாலைவனம்



ஈடு செய்ய இயலாத இமயச் சோகம்
இதயத்தைத் தாக்கிட, ஆறுதல் எட்டாத வானில்
அமாவாசை நிலவாய் மறைந்திட, அழுதாள்
புலம்பினாள் ஆறுதல் வேண்டிக் கரைந்தாள்




மங்கையின் கண்ணீர் மடை திறந்த வெள்ளமாய்ப் பாய
உற்ற துயர் கெட்டு ஊரார் வருந்திட, பெரியார் ஒருவர்
தேற்றினார், மகளே சென்று காண் பெருமான் புத்தரை
உன் துயர் நீக்கும் மாமருந்து போதிசத்துவர் ஒருவரே

மரணம் தவிர்க்க முடியாது ஒன்று,
வருவதை அறிவோடு ஏற்பது நன்று
ஞானம் பெற்ற பெருமானின் கூற்று

செவ்விழிகள் கண்ணீர் சிந்தி வருந்த, ஈரப் புடவை
புழுதி படிந்து வருந்த, இமயச் சோகத்தை
மனம் சுமந்து களைக்க, பெருமான் புத்தரை நாடி
ஓடி வந்த பேதை, சொந்தங்களை இழந்த அநாதை







பொன் எழில் பூத்த காலையில் பூத்த புத்தம்
புதுப் பங்கயமாய் பெருமானின் பிரசன்னம்-பொன்
மொழிப் போதனையில் குணம் கண்ட கூட்டம்
பெருமானின் பிரசன்னத்தில் பூத்த சத்சங்கம்

கதிர் முகம் பார்த்துப் பூரித்த சூரிய காந்தி,
கதிர் மறைய, அம்மா என்னும் மழலை கானம் மறைய
இதழ் உதிர்த்து சோபை இழந்து, இமயச் சோகம்
வருத்த பெருமான் பாதம் சரணம் என்ற தோகை

அன்னையின் துயர் கேட்டு -வருந்திய அருந்தவம்
தாயே , உங்கள் துயர் நீங்க ஒரு வழியுண்டு
ஒரு பிடி கடுகு பெற்று வாருங்கள்-ஆனந்தம் மலர
கை கூப்பித் தொழுத அன்னை

ஆனால் அம்மா, கடுகு தரும் வீட்டில் மரணம்
நிகழ்ந்திருக்கக் கூடாது, காலன் காலடி பட்டிருத்லாகாது
உறவு முறையில் மரித்தவர் துயர் சொல்ல
அந்த வீட்டில் யாரும் இறந்திருக்கக் கூடாது






தேறிய மனதில் ஊறிய நம்பிக்கை தெம்பளிக்க
கடுகி நடந்தவள், ஊராரிடம் ஒரு பிடி கடுகு கேட்டாள்
தர முன்வந்தவர் முன் தாய் கேட்டாள்-தாயே
உங்கள் வீட்டில் யாரும் இறந்தது உண்டோ?

தாய், தந்தை இறந்தார், செல்லச் சேய் இறந்தான்,
உற்ற கணவன் இறந்தான், பேரன் இறந்தான்
இறப்பில்லா வீடும் உண்டோ மகளே
பிறந்தவர் இறப்பது இயற்கையன்றோ?

மாலை வரை கடுகு பிச்சை கேட்டு கரைந்தழுத அன்னை,
உண்மையை அறிந்தாள். பிறந்தவர் இறப்பது இயற்கை வகுத்த நியதி
வீணாய்ப் புலம்பியழுவது பற்றால் வரும் கெடுதி

மகனைப் புதைத்து மனதில் சோகத்தை விதைத்து
பொங்கும் கண்ணீரோடு நின்ற பூவையோ, புயல் அழித்த பூவனம்,
கொழு கொம்பின்றி புழுதியில் அலையும் முல்லை வனம்

மண்ணில் புதைந்து மறைந்தது மண்ணலான உடல்
உணர்வுகளில் கலந்து, உயிரை வாட்டும் சோக
நினைவுகளின் ஓயாத அலை- கண்ட இன்பக் கனவும்
ஒரு பொழுதிற்குள் கலைந்திட அநாதையான நிலை






குளித்து, உடைமாற்றி உள்ளம் நொந்த தேறிய
அன்னை, பெருமான் பாதம் சரணடைந்தாள்
துக்கம், நீங்கிட வழி காட்டுங்கள்
வாழ்வு துக்கமானது விசும்பி மொழிந்தாள்

இவ்வுலகில் இறந்தவரோ பலர், இங்கே
வாழ்பவரோ சிலர், அவர்களும் இறக்க வேண்டும்
பழுத்த கனி மரத்தில் நிலைப்பதில்லை-தாயே
என்றுமுள்ள தர்மத்தின் நியதி இது

வாழ்வோ இன்ப, துன்பம் நிறைந்த குறுகிய கனவு
பிறந்தவர் யாரும் மரணத்தை கடந்து வந்ததில்லை
மூப்பு, பிணி, சாவு வருத்தும் உலகில் இன்பமில்லை




மரணம் நிகழாத வீடில்லை, மரித்தவருக்காய்
புலம்பாத உறவில்லை, மரணம் மாறத் துயர்
உண்மை அறிந்த மனத்திலே ஒளிரும் ஞானச் சுடர்

உண்மையை அறிந்தால் ஒளிரும் சுடராய் வாழ்க்கை,
நெய் வற்றிட அணையும் சுடராய் யாக்கை,
பற்றறுத்தவர் வாழ்வை துயர் பற்றுவதில்லை
குகையில் எரியும் தீபம் புயலில் அசைவதில்லை



குயவன் செய்த மண்பாண்டங்களாய் மனிதர்
குழந்தை, சிறுவன், இளைஞன், முதியோன் என
நாளும் மரணம் அழித்திடும் உயிர்கள்-எல்லாம்
மாறுபடும் உலகில், மாறாதது ஏதுமில்லை



உற்றார், உறவினர் அழுது புலம்பிட
ஒருவர் ஒருவராய் உறவுகளின் மரணம்
வெட்டக் கொண்டு செல்லப்படும் ஆடுகள்போல்
துக்கத்தால் நிறைந்த உலகில் மனிதர்கள்

உண்மையைப் புரிந்தால் அமைதியோ பெருநிதி,
பற்றறுத்த வாழ்வோ பெருநிதி, கண்ணீர்,
துக்கம் என்னும் கணையை உண்மையால் பிடுங்கி எறி
துன்பத்தைக் அறிந்து கடந்தால் இன்பம் மாறாத விதி

அழுவதனால் பயன் என்ன?, அழுது புலம்பி
உடலை வருத்தி நோயில் விழுவது மதியீனம்
அறியாமையைக் கலைய, ஆசையை அறுக்க
உண்மையை அறிந்து துன்பத்தை கடப்பது ஞானம்; .





ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும்
மாண்டவர் திரும்பி வருவதண்டோ? மரித்தவர்
மறைந்திட-மரணத்தின் பின் விதைத்தவற்றை
அவரே அறுத்திட, அதுவோ மாறாத விதி

தம்மத்தில் நிலைத்து, பஞ்ச சீலத்தைப் பற்றி
அட்டாங்க மார்கத்தில் ஒழுகி,
உண்மையை அறிவாய்,
உனக்கு நீயே அரணாகிப் போவாய்



என் துயர் பெரிதென்று அழுதது சுயநலம்,
உண்மையை உம்மால் அறிந்த மனதில் நிம்மதியோ
பெரு வரம், கரம் குவித்து வணங்கிய மங்கை
பெருமான் புத்தரிடம் சரணாகதியடைந்த அம்மை



ஆசையும், அறியாமையும் மனதிலே ஓயாத அலை
மூப்பு, பிணி, சாவு. மனிதரை வருத்தும் நிலை
உண்மையறிந்து பற்றறுத்தால் துன்பமில்லை-
பற்றறுத்தவருக்கு அமைதி கிட்டும் பொய்யில்லை

புத்தம் சரணம் கச்சாமி
தம்மம் சரணம் கச்சாமி
சங்கம் சரணம் கச்சாமி

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-12-1-2024

பெற்ற பிள்ளையை விற்ற அன்னை

"அல்லாகு அ.்.க்பர்" அதான் அழைக்க
வுழு செய்து தொழுத் தயாராகும் உண்டு கொளுத்த
ஈனப் மதப்பயங்கரவாதிகள் உள்ளத்தே கழுவியும்
போகாத கொலை வெறி, சட்டையிலோ குருதிக் கறை

உயிர்களை மதியாது- கொலைவெறி தணியாது
பல்லாண்டு தொடரும் ஆப்கான் யுத்தம்-நாளும்
அல்லாவை கூவியழைக்கும் அப்பாவிகளின் இரத்தம்
வானை முட்டும் உறவுகளின் அழுகைச் சத்தம

மதவாதத்தால் நஞ்சான மனங்கள்-பயங்கரவாதத்தை
"ஜிகாத்" ஆக்கிய கோரங்கள்: தேசமெங்கும் தீ எரிய,
அநாதை, விதவை, அங்கவீனர், அகதி எனச் சீரழிந்த
ஏழைகளின் வாழ்வில் நாளும் நூறு எரி நரகங்கள்

கொடு வெயில் தீய்த்திட, இரவில் கடுங்குளிர் வாட்டிட
பாலையில் முளைத்த பல்லாயிரம் காளான்களாய்
கூடு கலைந்த இறகொடிந்த பறவைகளின் கொட்டில்கள்
வரட்சியும், தீராத வறுமை ஆட்டுவிக்கும் தொட்டில்கள்



பல்லாண்டு தொடரும் கொடிய யுத்தம்
கணவனை கொன்று, கனவுகளை அழித்திட
விதவைக்கோ நான்கு குழந்தைகள்-சொல்லாமல்
வறுமையும், பசியும் உறவான தொல்லைகள்

வாழ்விழந்த விதவை-வரட்சியால் வாழிடம் துறந்து,
பாலையில் கூடுகட்டிய கைம்மை-குழந்தைகளின்
பசிபோக்கிட பாதி ரொட்டி ஏனும் தருவாய் அல்லா என்றே-
கண்ணீரால் வுழு செய்து துஆ கேட்கும் கொடுமை

பாடல் மறந்த புள்ளிக்குயில் துயரத்தில் கேவிக் கரையும்
ஆடல் துறந்த கலாபமயில் மறவாது ஐவேளை தொழுதும்,
எவ்வேளையிலும் கண்ணீர் மழையில் நீராடி
குழந்தைகளின் பசி போக்கிட அல்லாவை மனதால் இரஞ்சும்

நாளும் எதிர் நீச்சல் போட்டுக் களைத்த தாய்மை-
குழந்தைகள் பசியாற உண்ண, கனத்த இதயத்தோடு
பெற்ற குழந்தையை வறுமையால் விற்ற கொடுமை
பெற்றதோ சில நூறு- வாக்குறுதியோ பலநூறு

மிகுதிப் பணத்தை வருடம் இரண்டுக்குள் தருவேன்
வாங்கியவர் வாக்குறுதியை நம்பி-வாழ்க மகளே
வறுமையும், கைமையும் வாழ்த்திப் பிரிவினை சொல்ல
பிள்ளையை விற்று கண்ணீரில் மூழ்கிய தாய்மை

உள்ளத்தை தொடும் அன்னையின் பார்வையிலோ ஆற்றாமை
நெஞ்சை உருக்கும் ஆறு வயதுச் சிறுமியின் விழிகளிலோ வெறுமை
கொள்ளையர் காமப் பசியாற, விதவைகளும்,
கன்னியரும், சிறுமிகளும்-சில்லறைக்கு விலைபோகும்
யுத்த காலக் கொடுமை, உலகறியாத உண்மை



பசியாற உண்டு உறங்கும் சிறுமியின் கனவில்-
பாலும், பழமும், ரொட்டியும் உறவாட மலரும் புன்னகை
பிரிவும் தாங்கொண்ணாத் துயரும் இதயத்தை நோகடிக்க
தூக்கம் துறந்த தாயின் வாழ்வில் சோகமோ இமயச்சுமை

விலைபோன மகளாள் குடும்பப் பசிபோனது சிலகாலம்
வாங்கியவன் உடற்பசிபோக்க நாளை இவளும் உணவானால்
எண்ணமே இதயத்தை நொருக்கிட, எண்ணில்லா ஈட்டிகள்
நெஞ்சைத் துளைத்திட மனதோடு போராடித் தோற்ற தாய்மை
தேற்ற இயலாமல் அல்லாவும் கண் மறைந்த உண்மை

ஏழ்மையால் பற்றி எரியும் தாயின் வயிறு
ஆப்கான் மக்களின் கழுத்தை நெரிக்கும்
தலிபான்களின் தூக்கு கயிறு



காமக்காளைகளுக்கு-கன்னியரும் மிதித்து மேய்ந்திட-
வெறும் பச்சைப் புல்வெளிகள்தானோ-
விலை கொடுத்து வாங்கிய சிறுமியும்-வியாபாரிக்கு
காம விளையாட்டுப் பொருள்தானோ?

A CNN report on 22.11.2018

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-08-06.2023

போதையும் பேதையும்

இளமையில் தந்தை அகால மரணமடைந்திட, உறவுகள் கை நெகிழ்ந்திட
வறுமையால் அழகிய இளந்தாயும் விலைமகளாய் கோலம் மாறிட
அன்னை ஆடை களையும் நாளெல்லாம் வயிறு நிறையும்
தாயின் வாழ்வோ சோகத்தால் நிறையும், மங்கலம் குலையும்





காலங்கள் உருண்டோட-நாளும்
வேலைதேடி அலையும் பட்டதாரியாய் வாழ்வு
தெய்வத் தாயை தீராத நோய் வாட்டிட வந்த தீடீர்ச் சாவு
விரக்தியால் போதைக்கு அடிமையான மகனின் இழிவு

நாளும் தெருக்களில் நாசுக்காய் ஆங்கிலத்தில் பொய்கூறி
பணம் பெற்று பிழைக்கும் நாதியற்றவன் வாழ்வில்
உறவு சொல்ல ஒருத்தியாய் வந்தவளோ விலைமகள்.

அழகும், அநாதரவான நிலையும் கலைமகளை விலைமகளாக்கிட
விற்றுப்பிழைக்கும் உடலும் வெட்கம் மறந்து விறைத்திட
பட்டமரமாய் நின்றவள் நெஞ்சில் பசுந்தளிராய்த் துளிர்த்த முதற் காதல்

கல்லான அகலிகை **தெரு**ராமன் சொல்பட்டுப் பெண்ணாக
உடல் தழுவும் மனிதருக்குள்-உள்ளம் தழுவிய முதல் மனிதன்
சொன்ன காதல் கேட்டு பூத்துச் சிலிர்த்த நெஞ்சம்
அச்சம், மடம், நாணத்தின் அழகைச் சூடி
காதலாகி நாணிக்கனிந்து கோரிய காதல் தஞ்சம்

அன்னையின் அவலநிலை அறிந்தவன் அபலைக்கு உறவாக
அன்பாய் மலர்ந்த உறவும் காதலாய்த் துளிர்விட
தோழியாய் வந்த விலைமகளும் தோள்சாய்க வந்த உறவால்
முதல் மனிதனை கண்ட மனுஷியாய் நாணி மலர்ந்தாள்



நிலவு உலவும் பொழுதில்-தெருவில் அழகோ விலைபோகும்
விலைமகளுக்கு குலமகன்கள் வாடிக்கையாளர்
பாலியல் வியாபாரம் வயிற்றுப் பிழைப்பான விவகாரம்

ஒரு நாள் நிலவொளியில்-தெருமுனையில்
சந்தித்த இதயங்கள் பேசி மகிழ
காரில் வந்த கறுத்து தொந்தி பருத்த செல்வன்
காதலியை காமம் தணிக்க அழைக்க,
விலைமகள் காதலுக்கு வந்த விபரீதச் சோதனை.
அம்மணமான திரௌபதியாய் மனதில் வேதனை



குலுங்கிய வாகனம்-நெஞ்சைக் குலக்கிட
ஆற்றாமையால் நெஞ்ச வெடிக்க-ஓ வென
முகம் பொத்தி அழுத ஏழைக் காதல் மனம்

விலைமகளாய் யாரும் பிறப்பதில்லை
குலமகளாய் வாழ்வு கொடுக்க-
திருமகளோ கண்ணில் படாத நிலை

வீசிய நோட்டுக்களில் வீதியில் விழுந்திட
விழுந்த நோட்டுக்களை அள்ளி பொறுக்கியவளை
அண்ணலும் நோக்கினான், அவளும் நோக்கினான்

பார்வைகள் சந்தித்தபோது பரிதாபம் மிஞ்சியது.
விம்மிய நெஞ்சங்களில் ஈட்டி பாய்ந்த வலி
ஈரவிழிக் காவியமான ஏழையர் வாழ்வில் எங்கே ஒளி?

வேல் பாய்ந்த நெஞ்சோடு வேல்விழிகளும் வெட்கிக் கூனிக்குறுகிட
நீர் பாயும் விழிகளில் வெட்கமும், துக்கமும், அவமானமும்
விம்மலாய் வெளிப்பட, ஓடிச் சந்தியில் ஒளிந்து மறைந்தவளை
ஈரவிழிகளோடு பார்த்தவன் தன் இழிந்த இயலாமையை
எண்ணி துக்கித்து வெட்கி, ஓவென்று கதறி அலறினான்



தாயும் சுகம் பெறவில்லை, தாரமாய் எண்ணியவளுக்கும்
வாழ்வு கொடுக்க ஏழையாள் முடியவில்லை -விம்மியழுதான்
தெருவிலே உண்டு தெருவிலே பிழைத்து வாழும்
தெருப்பொறுக்கியையும் காதலித்த தேவதையின் பரிதாப வாழ்வு
இதயத்தை நொருக்கிட மெல்லச் சாய்ந்தான்

மறுநாள் நாதியற்ற பிணத்தை நகரசபை அள்ளிச்செல்ல
குழுமியிருந்த கூட்டத்தில் நுழைந்து பார்த்தவள்-
பார்த்தாள் பரிதாபமாய் மாண்ட காதலன் பிணத்தை

நெஞ்சு குமுறிட-விழி நீர் அருவியாய்ப் பெருகிட
தெருவோரம் குந்தியிருந்து ஓவென்று குமுறிக் கதறினாள்
உறவென்று வந்த ஒரு இதயமும் ஒரு சுகமும் காணாது
என் உடற்சுகமும் வேண்டாது உயிரிழந்து போனதே-ஐயகோ

விலைமகளின் காதலும் புனிதமானது
காமம் கடந்த காதலும் அமரத்துவமானது.

ராதைக்கும், சீதைக்கும், காதல் சொந்தமல்ல
பரத்தை மாதவிக்கும் காதல் விதிவிலக்கல்ல
காதல் இதயத்தின் மொழி

சீதைகள் தீக்குளித்து மீளலாம்-கண்ணகிகள்
மதுரையை எரித்து கற்பைப் பறைசாற்றலாம்
ஏழை விலைமகளோ ஏங்கியழுது சொன்ன காதலை
இறைவனும் கேட்டு உருகினான்

சீதையை தள்ளி வைத்த சீதா ராமனும்
இவள் பாடலைக் கேட்டு மனம் குமுறுவான்-
ராஜா ராமனும் சீதைக்கு இழைத்த அநீதி கண்டு
வாழ்நாளெல்லாம் வருந்தினான்



கற்பு உடல் சார்ந்த ஒன்றல்ல-மருத்துவம் உறுதிப்படுத்த
இருபால் இதயங்களின் புனித உணர்வு காதல்
ஒழுக்கத்தைச் சொல்வது மதமல்ல
இரக்கத்தையும், ஒழுக்கத்தையும், மன்னிப்பையும்
இயம்புவதே அன்பு மதம்
காதல் ஒழுக்கம் கடந்த அன்பின் வேதம்

மதுரையை எரித்த கண்ணகி- மாதவி மேல்
கோவலன் கொண்ட காமத்தை எரிக்கவில்லை?
நெய் வார்த்த தீயில் நீராடி வந்த சீதை
இராவணனன் காதலைத் தீய்க்கவில்லை

காதற் காமம் புனிதமானது
காமம் கடந்தால் கடவுள் நம் பாவம்

விலைமகளை இயேசு குற்றம் சொல்லவில்லை
சொல் பட்டு கல் எடுத்தவர் கண் மறைந்திட
விலைமகளும் மனுஷியானாள்



ஸ்ரீராமன் கால் பட்டு கல்லான அகலிகை பெண்ணாக
சீதையோ ஸ்ரீராமன் கல்மனம் கண்டு
வேண்டாம் என்றே பின்னாளில் பிரிந்து போனாள்

மறு நாள் இரவு-மரத்தடி நோக்கி ஊர்ந்து வந்த கார்கள் ஏமாந்து திரும்பிட-
கண்ணீரோடு கரை ஒதுங்கிய அலையில் காதலை இழந்த அபலையின் உடல்-
நெய் வார்த்த தீயில் நீராடி வர ஏழையிடம் பணமில்லை,
உண்மையாய் நேசிக்க இனி ஓர் உறவுமில்லை-
காதல் மனம் மட்டும் சொந்தமான நிலை
ஏழையின் காதலை கடவுளை அன்றி யாரும் அறியவில்லை

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-21-05-2023

பெருமான் புத்தரை தேடி



பக்தனாய், புத்தபெருமானைக் காணப் பல்லாண்டுகள் தொடர்ந்த
என் புனித யாத்திரை, உறவு துறந்து, உடமை களைந்து
சித்தார்தனாய் மாறிய தேடல். ஓர் நாள் என்னை அழைத்து வந்தது
நிரஞ்சனா நதிக்கரையோரம், நிலவு விழிக்கும் நேரம்

பெருமான் புத்தரோ அக்கரையில், கூட்டத்தின்
மத்தியில். நானோ இக்கரையில், நதி கடக்க
படகு தேடினேன்-படகுத் துறையில்
படகு ஏதும் கண்ணில் படவில்லை

"The world holds the thought of self,
from this arises false apprehension,
The self is an error,
an illusion, a dream.
Open your eyes and awaken
see things as they are
and you will be comforted."

Lord Buddha



படகுகள் கிடையாது, புத்தரின் தரிசனம்ஒரு சுயமுயற்சி,
நதியை நீந்திக் கடந்தவரே பெருமானை கண்டார்
கூட்டம் சொலிய அறிவுரை வியப்பானது, அற்புதமானது


நதியை கடக்க யாரும் துணியவில்லை, நம்பிக்கை
மானுட நெஞ்சங்களில்லை, கூட்டமோ வேடிக்கை பார்க்க
நதியில் பாய்ந்தேன்- கடந்தால் புத்தரின் தரிசனம்
மடிந்தால் காலனின் தரிசனம்

மறுகரை தெரியாத நதியில் நீந்தினேன்
பல காத தூரம், பல மணி நேரம்

நதியின் மத்தியில் போராடமல், நீரோட்டத்தோடு
நீரோட்டமாய் மிதந்து வரும் காவியணிந்த பிக்குவின் பிணம்
நெஞ்சில் கலக்கத்தை மூட்ட, அஞ்சி, மனம் கலங்கி, விலகி
நீந்திட, விடாப்பிடியாய் என்னைத் தொடர்ந்த விறைத்தபிணம்



உருவத்தில் என்னைப்போலிருக்கப் பார்த்தேன்,
நம்பமுடியவில்லை,நானேதான் பிக்குவின்
கோலத்தில் பிணமாய் மிதந்தேன்



கடந்த காலம் கழிந்து போயிட,
அறிவைச் சுமந்து ஆணவம் கொண்ட என் பிணம் -
நாதியற்று நதியில் மிதந்து போகின்றது

பிறப்பில் கொண்டுவராத அறிவை, விலக்கப்பட்ட
கனியை விரும்பிச் சுவைத்து, தகவல் அறிவாய்ச்
சேர்த்து ஆணவம் வளர்த்து-ஆன்மாவை மறைத்த
" நான்" எனும் இருளை பிணமாய்க் கண்டு வியந்தேன்

பிணம் கடந்து போயிட, பேரானந்த
சிரிப்பு வெடித்துப் பிறந்திட
என்னுள் பெருமான் புத்தரின் தரிசனம்,
நானும் புத்தரான அதிசயம்



என்னுள் புத்தமனம் விழிக்க, மீண்டும்
குழந்தையாய் பிறந்தேன்
வானில் பௌர்ணமி ஒளிர்ந்தது-என்னுள்
புத்த ஞானம் ஒளிர்ந்தது





புத்தநிலை என்னுள் இருக்க-வெளியே தேடியலைந்ததை
என்னுள் கண்ட ஆனந்தம் நிலைக்க கரை திரும்பினேன்
என்னை அடையாளம் கண்டவர் யாருமிலர்

கூட்டத்திடையே கூவினேன் என்னைத் தெரியவில்லையா?
அக்கரை செல்ல படகு தேடியவன், பெருமான் புத்தரைக் காண
-பெரு நதியை நீந்திக்க கடக்க நதியில் பாய்ந்தவன்
பெருநிதியைத் தன்னுள் கண்டவன்.

நம்புவார் யாருமிலர், அடையாளம் கண்டவரும் எவருமிலர்
பாதை மாறிய பயணம்-சித்தார்த்தன் புத்தனான ஞானப்பயணம்.
நானே கண்டேன், நானே உணர்ந்தேன்
"நான்" அழிய -சூனியம் மலர என்னே ஆனந்தம்.
ஆன்மாவே சூனியம், ஆனந்தத் தரிசனம்








இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra- 16-07-2023

றிஸானாவும்-ஷரியாவும்

வறுமைதான் ஏற்றிய குப்பிவிளக்கும்-
எண்ணெயின்றி வாடிடப் பார்த்திருக்கும்-வறுமைதான்
ஓட்டைக் கூரையால் ஒழுகிவரும் மழையில்
உடல் நனைந்திட-உயிர் நடுங்கிக் களைத்திருக்கும்

வறுமைதான் கட்டிய கந்தலும் இனி கசக்கினால்
கிழிவேன் எனஅச்சுறுத்தும் -வறுமைதான்
அடிவயிற்றில் மூண்ட பசித்தீயும் அணைந்திட வழியின்றி
இன்றும் நோன்பென தீய்ந்து புகைந்திருக்கும்



வறுமைதான் உள்ளவருக்கு வருடத்தில்
ஒரு தரம் நோன்பு -பொருளில்லா
ஏழைகளுக்கு நாளும் நோன்பு என நொந்தே
உணவுக்காய் வருந்தி அல்லாவைத் தொழும்

வறுமைதான்-பதினேழு வயதையும்
பத்தொன்பதாய் மாற்றி பணிப்பெண்ணாய்
கடல் கடந்து செல்ல வழியமைக்கும்.

உறவுகளை காத்திடஒருத்தி
உயிரை பணயம் வைத்தே கடல் கடந்தாள்
பணிப்பெண்ணாய் பணிபுரிந்து-அபலையிவள்
கொலைப்பழியால் இன்று உயிரிழந்தாள்.



பச்சிளம் குழந்தைக்கு பாலூட்டும் பணியில்
நோயுற்ற குழந்தை மரிக்க
பாஷை புரியாதேசத்தில் பாவையிவள்
கொலைப்பழியைச் சுமக்க
குருட்டு நீதிதேவதையின் நியாய தராசில்
றிஸனாவும் ஷரியாவும்.

விளங்காதமொழியில் விசாரணைகள்
மானுடம் அறியாதமுறையில் (அ)நீதி தீர்ப்புக்கள்

சுற்றமும் சொந்தங்களும் அரசும்,
மனித உரிமை அமைப்புகளும்
"மரணதண்டணையை" இரத்துச் செய்ய மன்றாடியும்
செவிடன் காதில் விழுந்த சங்கொலியாக
சிறையிருந்தவள் உயிரிழந்தாள் ஷரியா-நீதியாக

வாங்கு சொல்லும்போது காதுகளைப் பொத்தி
வல்ல அல்லாவை கூவியழைத்தவர்கள்
றிஸானவிற்கு-நீதி கிடைத்திட
வாயைத் திறவாமல் ஊமையாகிப்போயிட
ஷரியா அபலைக்கு அநீதியானதோ?
சவுதி அரசுக்கு நீதியானதோ?



வெட்டுண்ட தலையும் மண்ணில் விழுமுன் -கண்ணீரால்
“வுளு”செய்து வணங்கியதோ வல்ல அல்லாவை
வாழ்க உன் நீதி என்று.

“ஷரியா”சரியா எனக் கேள்வியானதே
மானுட உயிரும் வல்ல அல்லாவின் தேசத்தில்
“மனதையும்” “மதத்தையும்” வருத்தும் கேலியானதோ?
கண்ணுக்கு கண் பல்லுக்கு பல் இன்றும் நீதியானதோ?
“ஷரியாவும்”-மாற்ற முடியாத திருச்சட்டமானதோ?



ஈழப் பணிப்பெண்கள் வாழ்க்கையில்
இவள் வாழ்வு-துயரத்தின் உச்சம்
ஷரியாவின் நீதித்தராசில்
றிஸானவின் உயிரின் மதிப்போ துச்சம்

மத்திய கிழக்கில் மசகு எண்ணெய்க்கும்
பேரீச்சை பழத்திற்கும் உச்சவிலை
மங்கை றிஸானவின் உயிரிற்கோ மலிவுவிலை

வறுமை இருளுக்குள் உருகி ஒளிர்ந்த மெழுகுவர்த்தி
வண்ணக் கனவுகள் நனவாகு முன் அணைந்தது என்ன நீதியோ?
ஷரியாவின் நீதித்தராசும் கள்ளத்தராசோ?-நீதிதேவதையும்-
கண்களை கட்டிக் கொண்ட தேவதைதானோ?



வெட்டுண்ட தலையும் விசிறியடித்து பாய்ந்த குருதியும்
அல்லாவின் மண்ணை முத்தமிட்டே சொல்லின
“*மாஷா அல்லா*”என்றே.

கண்ணுக்கு கண் நீதி என்றால்-உலகே குருடாகும்
கொலைக்கு கொலைதான் தண்டனை என்றால்
உலகே கொலைகளமாகி சுடுகாடாகும்
நீதியின் பெயரால் மனிதனை மனிதன் கொல்லும்
மரணதண்டனை ஒழிக்கப்படல் வேண்டும்
அன்பினால் நீதி ஆளப்படல் வேண்டும்



சட்டம் மனிதனுக்கேயன்றி-மனிதன் சட்டத்திற்கல்ல
மனிதத்தைக் காக்கமுடியாத எந்தச் சட்டமும்
இறைசட்டமாயிருப்பினும்
வெறும் வார்த்தைகளேயன்றி வேறல்ல

தவறிழைத்தவன் தவறினைஉணர்ந்து திருந்திவாழ
வழியமைத்துக் கொடுப்பதே திருச்சட்டம்
அதுவே இறைநீதி
இறை கருணையைப் பிரதிபலிக்காமல்
நடைமுறைப்படுத்தப்படும் ஷரியா நீதிக்கே இழுக்கு

அமுல்படுத்தும் மதவாதிகளும்
இறைநேசர்களுமல்ல நியாயாதிபதிகளுமல்ல
ஏனெனில்
மன்னிப்பதால் நாம் மன்னிப்படைகின்றோம்
இரங்குவதால் நாம் இரக்கம் பெறுகின்றோம்

அன்பே-சிவம்-வாழ்வே-தவம்
அல்ஹுப்பு ஹுவல் ஹுக்ம் (அன்பே நீதி)
வஹ்ததுல் உம்மாஹ் (ஒன்றே குலம்)
வஹ்ததுல் இலாஹ் (ஒருவனே தேவன்)

Whoever killed a human, except as a punishment for a murder
or for sedition in the earth,
shall be looked upon as though he had killed all mankind.
-Al Quran 5:32

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-08-04-2023

துறவியும் சீடரும்

பெய்யும் மழையும்-வையகத்தை மிரளவைக்கும் பிரளயமாக,
வீசும் காற்றும்-மலையையும், மரங்களையும் அசைத்திடும்
சண்டமாருதமாக, வெட்டும் மின்னலும் வெடிக்கும் பேரிடியும்
அச்சுறுத்தும் கொடும் அரக்கனாக- துறவிகளின் பயணம்

பசியும் களைப்பும் வருத்தும் வழித்துணையாக,
ஈர உடையும் களைத்த உடலும் சிலுவையாக,
பிரான்சிஸ் அசிசியும் சீடர் லியோவும் -இருப்பிடம் தேடி
பொழுது சாய்ந்தும் தொடர்ந்த பயணம்



குரு வினவினார் தம் சீடரிடம்
லியோ மெய்யான துறவி யார்?

அந்தகர்க்கு பார்வையளிப்பவரோ?
பெருநோயைக் குணப்படுத்துபவரோ?
மாண்டவரை உயிர்ப்பிப்பவரோ? இல்லை-
இவர்கள் உண்மையான துறவிகள் அல்லர்

மண்ணின் மொழியும், மரங்களின் மொழியும்
விண்ணின் மொழியும், விலங்கினங்களின் மொழியும்
அறிந்தவரோ அல்லர்-காவி தரித்து, முடி மழித்து
முற்றும் துறந்தவரும் துறவி அல்ல



அமைதி நிலவிட குருவும் சீடரும் நடந்தனர்.
அடையும் நகரோ தொலைவில் ஒளிர்ந்திட
-பிரான்சிஸ் மொழிந்தார்
சொத்தும் சுகமும் துறந்தவரும் துறவி அல்ல

பசியும் களைப்பும் வாட்டிட-சீடர் கேட்டார்
அப்படியென்றால் யார்தான் துறவி?

ஊரை நெருங்கிவிட்டோம்-வரவேற்க
எமக்கோ உறவுகள் யாருமில்லை:
விடாமல் விடுதியின் கதவுகளை தட்டி-பசியாற
உணவும், களைப்பாற இடமும் கேட்போம்

உம் உறவுகள் ஏழைகள் நாங்கள் அருள்
கூர்ந்து இரங்குங்கள் என்று இரப்போம்
கருணை காட்டுங்கள் எனக் கெஞ்சுவோம்

விடுதி உரிமையாளரோ பிச்சைகாரர்களே
இரந்துண்ணும் சோம்பேறிகளே உணவில்லை,
உறங்க இடமில்லை இங்கிருந்து ஓடி விடுங்கள்
என்று எம்மை விரட்டிக் கதவைச் சாத்துவார்

மழையும் புயலும், சேறும் சகதியும், பசியும்
களைப்பும், எம்மை வாட்டிட-நம்பிக்கையோடு
மீண்டும் தட்டுவோம் மனமிரங்கித் திறப்பார்
எம்மையும் விருந்தாய் மனமுவந்து ஏற்பார் என்று

உரிமையாளரோ தடி கொண்டு எம்மை விரட்டி
தடிப்பயல்களே போக்கிரிகளே, நள்ளிரவில்
தொந்தரவு செய்யாமல் போய்விடுங்கள் கத்தி
மீண்டும் கதவையடைப்பார்



ஒன்றும் தோன்றாத நிலையில்-மனம் அழிந்து
சூனியத்தில் இலயிக்க-இருமை கடந்த தூய மனம்-
விடுதி உரிமையாளரை பிரபுவாய்த் துதிக்கத் தோன்றும்
உளநிலையே உண்மைத் துறவு நிலை-சந்நியாசம்

எச் சூழலிலும் எவ்விடர் நேரிடினும், அமைதியும் எளிமையும்
அகங்கார நிலையழிந்த அன்பு நிலையே மெய்யான
துறவு நிலை-அறிவாய் லியோ-அன்புடன் பகர்ந்தே
பயணம் தொடர்ந்தார் பிரான்சிஸ் அசிசி

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-10-1-2024

கடவுள்களும்-செஞ்சட்டைத் தோழர்களும்

சமுதாயப் புரட்சிக்காய் குரல் கொடுத்த பேராளியெல்லாம்
சாயம்போன தம் செஞ்சட்டையை இரத்தத்தால் சிவப்பாக்கினார்,
ஆட்சியைக் கைப்பற்றிய புரட்சித்தலைவர்களோ, ஜனநாயகத்தை
அடிமையாக்கி-வரலாற்றில் சர்வாதிகாரிகளாய் அரசோச்சினார்.

கார்ல்மாக்ஸ், லெனின், இங்கசால் உருவப்படங்கள்
சுவர்களை அலங்கரிக்க- “கப்பம் ” பெற்று
ஏழைகளின் உழைப்பை உறிஞ்சிடும்
அட்டைகளாய் விடுதலை இயக்கங்கள்.




துப்பாக்கிகளும் செஞ்சட்டைகளும் புரட்சியாகாது,
வான்முட்டும் கோஷங்களோ, சிந்திடும்
முதலாளித்துவ இரத்தங்களோ ஏழ்மையை
போக்காது, வர்க்க பேதத்தை ஒழிக்காது.



ரஷ்யா-சீனா-கியூபா, வியட்நாம் என
புரட்சிகளால் ஆட்சிமாற்றங்கள்.
“சார் மன்னர்களின்”புதிய அவதாரங்களாய்
அடக்கு முறைகளின் புது வடிவங்கள்.

புரட்சித் தோழர்கள் அரியணை அமர்ந்தும்
ஏழ்மை ஒழியவில்லை- சிந்திடும்
அப்பாவிகளின் இரத்தம் குறையவில்லை

“டெனமன் சதுக்கத்தை” சிவப்பித்த இரத்தமும்
‘பொல்பொட்டின்- குரூர கொலை நிலங்களும்”
திசைமாறிய புரட்சியின் கொஞூரங்களே.



ஸ்டாலினும், லெனினும், மா சே துங்கும்
பிடல் காஸட்ரோவும், பொல் பொட்டும்
புரட்சி என் சிந்திய இரத்தமெல்லாம்
தொழிலாளி வர்க்கத்தின் குருதியே!

செஞ்சட்டை வீரர்களின் செம்புரட்சிக்கு “தோள் கொடுத்த”
தொழிலாளிவர்க்கம், பின்னாளில் “கூலியானது”-
ஆயுதம் தாங்கிய முதலாளித்துவ தலைமைத்துவத்திற்கு-
அச்சத்தால் கோஷமிடும் ஏழைக் கும்பலானது.

நீதி தேவதையின் கண்கட்டை அவிழ்த்து,
உறங்கும் கார்ல் மார்க்ஸை எழுப்புங்கள்
ஸ்டாலின்-லெனின்-மா சேதுங்

பிடல் காஸ்ட்ரோ, பொல் பொட் தோழர்கள் கொன்ற
அப்பாவி உயிர்களின் கணக்கை கேட்கட்டும்

கண்களைப் பறிக்கும் செஞ்சட்டையிலும், கருத்தை
மயக்கும் சிவப்பு சிந்தனைகளிலும் அப்பாவிகளின்
குருதிக்கறைகள், மதங்களும் அபினியாகி-
மார்க்ஸிசமும் போததைப் பொருளான அவலங்கள்.



ஏழை இலாசர்களின் பசி தீர்க்க, செல்வர்களை வேட்டையாடினால்-
உலகில், கொள்ளையர்கள்தான் மிஞ்சுவார்-தோழர்களே
பகிர்ந்து வாழ்ந்தால் எல்லோரும் வாழலாம்
உழைத்து வாழ்ந்தால் எல்லோரும் உண்டு மகிழலாம்.

புரட்சிகள் புரியும் போர்களும்-கொலைகளே
ஜனநாயகம் மறுக்கப்படும் ஆட்சி முறைகளும் சர்வாதிகாரமே.
வர்க்க பேதங்களை ஒழிக்க வன்முறைகள் நீதியாகாது.
ஆயுதங்கள் இரட்சிப்பை அருளாது.

நிறவெறிக்கெதிராய் போராடிய நிராயுதபாணி மார்டின் லூதரும்
இந்திய சுதந்திரத்திற்காய் போராடிய அஹிம்சாவாதி-மகாத்மாவும்
வன்முறையால் வீழ்ந்தாலும்-இன்றும் மனித மனங்களில் வாழ்கின்றார்
வன்முறையே தம் வழி என வரலாறு படைத்திட்ட
புரட்சித் தலைவர்கள் புழுக்கள் அரித்திட-
வரலாற்றில் அழுகி நாறுகின்றார்.



மானுடத்தைச் சுரண்டும் போதெல்லாம், மதங்களும்
அபினியான அவலம், மார்க்ஸிய சிந்தனையும் இரத்தம் சிந்தி
மனித உரிமைகளை மீறும்போதெல்லாம்
“இரட்சகர்களே”-“இராட்சதர்களான” துயரம்.

பாடலில் குற்றம் கண்ட பாவலனை, நெற்றிக் கண்ணண்
வாட்டியதும் வன்முறையே!.முத்தமிழ் புலவன்
கேள்விகளுக்கு வித்தகனாய் விடை சொல்லாமல்
பிறைசூடிய பித்தன் கையாண்ட முறை “குற்றம் குற்றமே”.



வன்முறைதான் வழியென்றால்“அன்பே சிவம்” கோஷமோ?
“திரு விளையாடலிலும் அரக்க நியாயமோ?”
மனங்களை வெல்ல முடியாத தெய்வங்கள்
மானுடத்தை வதைப்பது வன்முறையா? வல்லமையா?

அவதாரமெல்லாம் ஆயுதபோராட்டங்களே
வரம் கொடுப்பதும் பின் வதை செய்வதும்
அவதார புருஷர்களின் அரக்கத்
திரு விளையாடல்களோ?

நீதி விளங்கிட, தர்மம் நிலைத்திட-வியாசரே காந்தாரியின்
கண்கட்டை அவிழ்த்து- புத்திரன் திருதராட்டினுக்கு பார்வை
கொடுங்கள், பள்ளி கொள்ளும் பரந்தாமனே, தூங்கியது போதும்-
விழித்தெழுங்கள் குருஷேத்திர யுத்தத்தை நிறுத்துங்கள்

அமெரிக்க மண்ணில்-கறுப்பு அடிமைகளின் கூக்குரல்
வானைத்தொட்டபோது வாளாவிருந்த கிறிஸ்தவ இறைவன்
நிறவெறி பிடித்த வெள்ளையனோ?
இல்லை நிறக்குருடனோ?

அன்பினால் ஆளவந்த மதங்கள் அலிகளாயிட,
தெய்வங்களும் கல்லாகிட,
“ஜிகாத்துக்களும்” “வன்முறைகளும்”
புரட்சியின் கொடிய வழிகளான கொடுமை

அடிமை இஸ்ராயேலரை மீட்ட- “யாவேயின்”
வல்ல கரங்களிலும் மானுட இரத்தம்
இந்து, இஸ்லாம் வரலாற்றிலும் இரத்தம்

எரியும் முட்செடியில் புனிதர்கள் குளிர்காய
பாரோவின் சிம்மாசனத்தில் இஸ்ராயேல்,
பரிதவிக்கும் அகதிகளாய் பாலஸ்தீனர்



பாலையாய் காய்ந்து, சாக்கடலாய் கசந்த வாழ்வில்,
வன்முறையும் இறைநீதியானது-இஸ்லாமியருக்கு
“அழுகைச் சுவர்” என்றோ இடிந்த பழங்கட்டத்தின் மதிலாகிட,
யூதருக்கோ “அல் அக்ஸாவும்” கட்டிடம்
அல’லாகு அ∴பர் வெற்றுக் கோஷம்

“இனம் மாற்றிய கடவுளும்”-தம் பெயர் மாற்றி
மதம் படைத்து, புது வேதம் கொடுத்திட, மதம்மாறிய
மனித இதயங்களில் மனிதம் செத்த அவலம்
மதவெறி தணிக்க நாளும் சிந்திடும் இரத்தம்

மதப் பயங்கரவாதம் உலகை அச்சுறுத்த நாளும் கொலைகள்
குருட்டு தேவதை நீதித்தராசோடு இருட்டில் தடுமாறுகின்றாள்
“கண்ணப்பனே” அவளுக்கு விழிகொடுங்கள்
இறைமகனே, பேதைக்குப் பார்வை கொடுங்கள்

கண்ணுக்கு கண், பல்லுக்கு பல் என்றால்
உலகில் குருடர்தான் மிஞ்சுவார்
யுத்தங்கள் நீதியென்றால் வன்முறைதான் வழியாகும்.
அணுவாயுதம் உலகை அழிக்கும்.



வேதங்களும், சாதி, மதவெறியர்களின்
வெற்றுப் புராணங்களோ? கட்டுக்கதைகளோ?-பெருமானார்
மோஸே-இயேசு- முகம்மதுவின் போதனைகளும்
பழங்கதையாய்ப் போனதென்ன?
மதங்களும் போதை வஸ்தாய் மாறியதென்ன?

ஞானம் பெற்றவரோ-அமைதியில் இன்புற்று நின்றார்
அஹிம்சையே வழி , உண்மையே விடுதலை
எதிரியையும் அன்புசெய் என்ற மனுமகனோ
சிலுவையில் உயிர் துறந்தே விடுதலை வாழ்வு தந்தார்.


Truth is Divine -Love is GOD

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-08-10-2023

ஷரியா நீதி?

Asia Bibi blasphemy case

2010 Pakistani criminal case / From Wikipedia, the free encyclopedia



கிணற்றில் நீர் எடுப்பதில் தொடங்கிய சர்ச்சை
வார்த்தைகள் தடித்துக் கறுத்திட, வாய்ச் சண்டை
உக்கிர நாய்ச் சண்டையாய் மாறிட-வசை மொழிகளோ
நடத்தையைப் பழித்திடும் அனலும், ஆலகால நஞ்சுமானது

வளர்ந்த பல்லாண்டுச் சிநேகம் அழிந்திட, சினம் கொதித்து,
நட்பைச் சபித்திட, வக்கிரமான கோபம், உக்கிரமாகி
வாழ்வை அழித்திட, அல்குரானையும்- அல்லாவின் தூதரையும்
இஸ்லாமையும், தூஷித்தாள் பீபீ புதுக் கதையானது, குற்றமானது



கதை திசை மாறிட, தோழியும் துணையாக
இரு முஸ்லீம்களின் சாட்சியத்தை ஷரியா ஏற்றது
செல்லாக் காசான உண்மை
தூக்கு தண்டனைக்கு ஆளான பெண்மை

பல முறை பிற்போடப்பட்ட தண்டனை
பத்தாண்டு சிறை வாசமாய்த் தொடர்ந்திட
மரண நோன்பான சிறை வாழ்வு
வாழ்வில் நாளும் பலமுறை வரும் சாவு

The statements made by Muhammad Idrees (CW1) and Muhammad Amin Bukhari, SP (Investigation) (PW6) before the trial court revealed that the alleged blasphemy had been committed by the Christian appellant after her Muslim co-workers had insulted the appellant's religion and had injured her religious sensibilities only because she believed in and was a follower of Jesus Christ. According to the Holy Qur'an a Muslim's faith is not complete till he believes in all the Holy Prophets and Messengers of Almighty Allah including Jesus Christ (Isa son of Maryam) (Peace Be Upon Him) and all the revealed Holy Books of Almighty Allah including the Holy Bible. From that perspective insulting the appellant's religion by her Muslim co-workers was no less blasphemous.

இரவு பகலாய் உறவுகளை அச்சுறுத்தும் பயம்
எரிந்த அடுப்பும் அணைந்து சோர்ந்த நிஜம்
உயிரும் மெய்யும் உருகும் மெழுகு வர்த்தியாய்
இறைவனை தொழுதிட-பொய்மையால்
சோகவனச்சிறையிருக்கும் தாய்மை-ஷரியா நீதியோ
மதவாதிகளின் கைப்பொம்மை?

விரக்தியிலும், வேதனையிலும் வாழ்வு கழிய
விசுவாசம் இறைவனை வேண்டி அலைய
நாதியற்ற பேதை நிரபராதி என்று நீதி வழங்கினார்
மூவரடங்கிய உத்தம இஸ்லாமிய நீதிபதிகள்.

சிறைக்கதவு தாள் திறந்திட-சிந்தை குளிர்ந்து
சுதந்திரக் காற்றை சுவாசித்து, ஈர விழிகளால்
இறைவனுக்கு நன்றி சொல்லிய இதயத்திலே இன்பம்

எரி மலையாய்ப் பொங்கிய-இஸ்லாமிய அடிப்படை வாதம்
தீர்ப்பை எதிர்த்து நாடெங்கும் வெடித்த-
வன்முறைப் போராட்டம்

வன்முறையைத் தூண்டும் மதவாத உரைகள்
நாடாளுமன்றத்தை நடுங்கச் செய்திட-அமைதியின் மதம்-
மதவாத வன்முறைக்கு அடிபணிந்த அவலம்
நிலை பிறழ்ந்த ஷரியா நீதி -பீபீயை
மீண்டும் சிறை செய்த (அ)நீதி

ஏழைத் தாய்க்கு உதவிக்கரம் நீட்ட முடியாது
அநாதரவாய் சிலுவையில் அறையுண்ட இயேசு
கசையும், ஈட்டியும் வதைத்த உடல்-செம்பூவாய்க்
காட்சி தர கழுமரத்தில் அறைந்த யூத மதவாதம்

சுமத்திய குற்றம்-தேவ தூஷனம்
இயேசு இறைவனை நிந்தித்தார்-தன்னை
இறைவனுக்கு நிகராக்கினார்

சாத்தானும் வேதம் ஓதிட , சாத்தானின் வார்த்தை வேதம்
என மதத் தீவிரவாதம் வியாக்கியானம் செய்திட
அன்பு, மன்னிப்பு, கருணை, உண்மை மறந்து
அபினியும், போதையுமாய் நாறிய மதவெறி

ஐவேளை தொழுகையும், கலிமாவும்
ஹச்சும், நோன்பும், சகாத்தும் சடங்காய்போனது.
பிறைக்கொடி உயரப் பறந்திட-அல்லாகு அ.்க்பர்
வன்முறைக்கு கட்டியமாய் மாறியது

சலாம் அலேக்கும் சாரமற்ற உப்பாய் கசந்திட
தோள்களில் ஆயுதங்கள்-மனங்களில்
மாறாத மதப்பயரவாதங்கள்

அன்பே கடவுள் எனும் மதங்கள் அமைதியைக் குலைத்திட
நாஸ்தீகர் அமைதி வேண்டி அகிம்சையைப் போற்றிட
கடவுள் இறந்துவிட்டார் என நீட்ஸே கூவினார்
அபினியும், போதையும் மதம் என்றார் கார்ல் மாக்ஸ்

சாந்தி!, ஷலோம்-சலாம் அலேக்கும்-அலேக்கும் சலாம்,
சமாதானம் உங்களோடு இருப்பதாக சாரமற்ற வார்த்தைகள்?
மதவாத உலகில் உண்மை இன்றும் அநாதையான வேதனை?

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-09-06.2023

In June 2009, Noreen was harvesting falsa berries with a group of other women farmhands in a field in Sheikhupura. She was asked at one point to fetch water from a nearby well; she complied but stopped to take a drink with an old metal cup she had found lying next to the well. A neighbor of Noreen, Musarat, who had been involved in a running feud with Noreen's family about some property damage, saw her and angrily told her that it was forbidden for a Christian to drink water from the same utensil from which Muslims drink, and that some of the other workers considered her to be unclean because she was a Christian, referring to the caste system in Pakistan. Noreen recounts that when they made derogatory statements about Christianity and demanded that she convert to Islam, she responded, "I believe in my religion and in Jesus Christ, who died on the cross for the sins of mankind. What did your Prophet Mohammed ever do to save mankind? And why should it be me that converts instead of you?" An argument ensued.

A mob came to her house, beating her and members of her family before she was taken away by the police. The police initiated an investigation about her remarks, resulting in her arrest under Section 295 C of the Pakistan Penal Code.

தமிழ் தேசியம்



அடக்குமுறையின் வடிவம் எல்லாம் வன்முறை வடிவங்களே
பேரினவாதமானாலும், மதப் பயங்கரவாதமானாலும்
மேட்டுக்குடிகளின் சாதியமானாராலும், மேலாதிக்க
ஒடுக்குமுறை அராஜகமே, அவற்றை ஒழித்தல் நம் கடனே



சங்கிலியன் ஆண்ட காலத்தில்-வெள்ளாளர்
சாதிய கொடுமையால் வெந்த இனம்-
புனித பிரான்சிஸ் சேவியரால்-மதம்மாறி
போர்த்துக்கேயர் பாதுகாப்பை நாடிய கரையார் இனம்

கல்வியும், செல்வமும் மேட்டுக்குடிக்குச் சொந்தமானது
கைகட்டி. வாய்பொத்தி, மேல் துண்டும், செருப்புமின்றி
சாதியம் கடந்த தெருவில் யாத்திரை-சாதியச் சிறை மீள
சமயம் மாறியதோ ஏழைகளுக்கு கிட்டிய விடுதலை?



நல்லூர்க் கந்தனுக்கும், நாவலருக்கும்
தீண்டாத சாதி, ஆலயம் பிரவேசமும்
ஏழைகளுக்கு கிட்டாத நீதி

வெள்ளையனுக்கு சாமரம் வீசீ, ஆங்கிலக் கல்வியால்
உயர்ந்த ஜாதி, படித்த மேட்டுக்குடி பரம்பரை
பரம்பரையாய் ஆளத்-தாழ்ந்த ஜாதி வாக்குகள்
சாதியம் தாண்டி மேட்டுக்குடிக்கு உரித்தாவது என்ன நீதி

1920 இல் பிரித்தானிய தேசாதிபதியிடம்-தாழ்த்தப்பட்ட
சாதிக் குழந்தைகள் பாடசாலைகளில் ஒதுக்கப்படவேண்டும்,
சமபந்தி, சமபோசனம் நிறுத்தப்படவேண்டும்
வாதாடியவரோ மேட்டுக்குடி சேர்.பொன் இராமநாதன்



எல்லோருக்கும் வாக்குரிமை என்றால் கும்பலாட்சி நீதியாகும்
வேளாளருக்கும், தனவந்தருக்குமே வாக்குரிமை
மேட்டுக்குடிக்கே என்றும் ஆளுமுரிமை -டொனமூர் ஆணைக்குழு
முன் வாதாடிய வெள்ளைத் துரையும் சேர்.பொன் இராமநாதன்

1944 இல் இலவசக் கல்வி மசோதாவை சட்டசபையில் எதிர்த்த
மேட்டுக்குடித் தலைவர்களாய், ஜீ. ஜீ பொன்னம்பலம், சிறிபத்மநாதன்,
அருணாசலம், மகாதேவா- தாழ்ந்த ஜாதி படித்தால்
தம்முரிமை பறிபோகும் அறிந்த சாணக்கியம், நரித் தந்திரம்

சுயபாஷை அரசமொழி சட்டத்தை எதிர்த்து
ஆங்கிலமே ஆளும் மொழி-அன்று குரல்
கொடுத்த சட்டத்தரணி பொன்னம்பலம்-வெள்ளைக்
காலணித்துவத்தின் பிரதிநிதி, மேட்டுக்குடியின் குரல் ஒலி


1947 இல் பிரஜா உரிமை சட்டத்தை எதிர்த்து
ஐக்கிய தேசியக் கட்சியுடன் கை கோர்த்து வாக்களித்து
பத்து இலட்சம் மலையக மக்களின் வாக்குரிமையைப் பறித்து
நாடற்றவராக்கிய அராஜகம், தமிழனுக்குச் செய்த துரோகம்?



அடங்கத் தமிழன், தமிழ்த் தேசியத்தின், சிந்தனாவதி
சுந்தரலிங்கமோ சாதி வெறியின் மாறாத அவதாரம்,
1968 இல், மாவிட்டபுரம் கோயிலுக்குள்-தாழ்ந்த சாதி
நுழையத் தடை விதித்த தமிழ் தேசியவாதி



தாழ்த்தப்பட்ட சாதி கொல்லப்பட்போது-தாழ்ந்த சாதிக்காய்
வழக்காட மறுத்த தமிழ் சட்டத்தரணிகள் தமிழ் தலைவர்கள்,
தெற்கிலிருந்து வந்து வாதாடிய சிங்கள சட்டத்தரணிகயோ
இடது சாரிகள், சாதியம் கடந்த மனிதநேயப் பித்தர்கள்


"இந்திய வம்சாவளி மக்களின்
பிரஜாவுரிமை பறிக்கப்பட்டதை ஜீ.ஜீ
ஆதரவளித்தார்" என்ற பிரசாரம்,
ஜீ.ஜீ, டீ.எஸ்.சேனநாயக்க
தலைமையிலான அரசாங்கத்தோடு,
'எதிர்வினை-ஒத்துழைப்பு'
அடிப்படையில் இணைந்துகொண்டு,
அமைச்சுப் பதவியைப்
பெற்றுக்கொண்டதன் பின்னர்,
ஜீ.ஜீயின் அகில இலங்கை தமிழ்
காங்கிரஸிலிருந்து பிரிந்து,
ஆங்கிலத்தில் '.:.பெடறல் பாட்டி'
என்றும், தமிழில் 'இலங்கை
தமிழரசுக் கட்சி' என்றும்
பெயர்கொண்ட கட்சியை சா.ஜே.வே
செல்வாநாயகமும் அவரது
ஆதரவாளர்களும்
தொடங்கியதிலிருந்து, அவர்களால்
கடுமையாக ஜீ.ஜீக்கு எதிராக
செயல்கள் முன்னெடுக்கப்பட்டன.

செல்வநாயகத்தை எதிர்த்து தேர்தலில் நின்ற
அடங்காத் தமிழன் சுந்தரலிங்கம், வேலா?, சிலுவையா?
தேர்தல் மேடையில் மதவெறியின் பிரச்சாரம்-தமிழன்
இந்துவா, கிறிஸ்தவனா? ஒரு நாள் வெடிக்கும் பூகம்பம்



"ஏழைகளுக்கும் நெற்காணி" உரித்தாக வந்த
சட்டத்தை, 1957 இல் எதிர்த்தவரோ
தமிழரசுக் கட்சியின் நிறுவனர் செல்வநாயகம்

ஆளும் பிரித்தானிய, சிங்கள வர்க்கத்தோடு இணைந்த
தமிழ் மக்களின் உரிமைகளை "சாதியத்தால்"
நசுக்கிய யாழ் மேட்டுக்குடி வர்க்கத்தின் சுயநல
சித்தாந்தமே " தமிழ் தேசியம்"-வெட்கம்

1947 இல்- ஜின்னாவிற்கோ பாகிஸ்தான்
ஜி.ஜிகோ தமிழ் ஈழம், அரசியல் கூத்தானது
அரசியல் மேடைகளில் மேடைப் பேச்சானது

ஆங்கிலக் கல்வியால், பிரித்தானிய அடிவருடிகளாய்
இலங்கையெங்கும் உயர் பதவி வகித்த தமிழ் மேட்டுக்குடி,
1956 இல் அரசகரும மொழி சிங்களம் அமுலானபோது
ஆட்டம் கண்டு இழந்த மணிமுடி

உயர் கல்வித் தரப்படுத்தல், கல்வியில் முன்னிலை
வகிக்கும் யாழ் மாவட்டத்தில் அமுலானபோது
ஏனைய ஆறு தமிழ் மாவட்டங்களுக்கும்
அதுவே வரப்பிரசாதமானது

தங்கத்துரையும், இராஜதுரையும்-குடா நாட்டுக்கு வெளியே பரந்து
வாழும் தமிழ் பிள்ளைகளும் பல்கலைக் கழகம் செல்ல-இதுவோ
வரப்பிரசாதம், கொண்டாட, ஒட்டு மொத்த தமிழினத்திற்கே அழிவு
யாழ் மேட்டுக்குடியை மையப்படுத்திய எதிர்த்த தமிழரசுக் கட்சி

தனித் தமிழ் ஈழம், பிரிவினை வாதம்-தமிழினத்திற்கே
அழிவைத் தரும் இனவாதம், தலைவர்கள் தொண்டமானும்,
செல்வநாயகமும் எச்சரித்தும், அடம் பிடித்த அமிர்தலிங்கம்,
நிறைவேறிய வட்டுக்கோட்டைத் தீர்மானம்

சாதிக்கட்டமைப்பால் உருவான அதிகாரப் படிநிலைச் சமூகமாய்
யாழ் மேட்டுக்குடி, அவர்தம் பிரச்சினையை முன்னிலைப் படுத்தி
தமிழ், முஸ்லீம் மக்களின் நலன்களைப் புறந்தள்ளி முன் எடுத்த
"தமிழ் தேசியம்"அரசியல் வேசித்தனம்



"யாழ் மையவாதச் சித்தாந்தம்"-தமிழ் தேசியம் அல்ல
தமிழர் தலைமைத்துவம் யாழ் மேட்டுக்குடிகளுக்கு
என்றும் உரித்தான பரம்பரைச் சொத்துமல்ல

1960- 1970 இல் யாழில் தலைதூக்கிய சாதியத்திற்கெதிரான
போராட்டங்களில், ஒதுங்கி நின்று வேடிக்கை பார்த்த கட்சிகளாய்
தமிழரசு, தமிழ் காங்கிரஸ்-சாதியத்தை பாராளுமன்றத்தில்
நியாப்படுத்தி கேலி செய்த தலைவராய் அமிர்தலிங்கம்

ஆலயப் பிரவேசம் இந்துக்களின் போராட்டம்
நானோ- கிறிஸ்தவன், தமிழ் தேசியத்தின் தந்தை,
செல்வநாயகத்தின், அரசியல் சித்தாந்தம், பேடித்தனம்



மொழி, நிலம், பண்பாட்டை மையமாகக் கொண்டு
ஒடுக்கப்பட்ட இனம் என் சாதி, ஒடுக்குபவனோ நம் சாதி
இது என்ன நீதி, எல்லோருக்கும் சம நீதி, மறந்த
மேட்டுக்குடிகளின் தமிழ் தேசியமோ சதி, சாதிய வெறி

சாதிக்கொரு வீதி, சாதிக்கொரு சுடுகாடு,
சாதிக்கொரு கோயில் என பிரிந்து நின்ற சமூகம்
ஒன்றுபடுவது எப்போது? ஒன்று பட்டால்
உண்டு வாழ்வு நிதரிசனமாகும் அப்போது.

வெள்ளாளன், செட்டி மேட்டுக்குடி,-பள்ளன்
பறையன், நளவன். வண்ணான் எமக்கு
சேவகம் புரி-தீண்டாமை வளர்த்த மண்ணில்
ஒற்றுமை, மனிதநேயம் துளிர்ப்பது எப்படி?



யாதும் ஊரே யாவரும் கேளீர், ஒன்றே குலம், ஒருவனே தேவன்
யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகமும்-தமிழன் வகுத்த நெறி
யாழ் மண்ணில் வாழ்வது தழினினமா?-இல்லை
தமிழ் பேசும் மக்களின் பல்லினமா? தமிழா சிந்தி



ஊர் கூடித் தேர் இழுத்தால் ஒற்றுமை என்பதை மறந்து,
தாழ்ந்த சாதி தேர் இழுப்பதா? பூட்டிக் கிடக்கும்
கோயில்கள், கல்லாய், சிலையாய் தெய்வங்கள்-JCB கொண்டு
தேர் இழுக்கும் நிலைப்பாடு, நாம் தமிழர் என்பதோ கூப்பாடு

தழிழ் தலைவர்கள் எல்லாம் மேட்டுக்குடிகளே
வாக்கு வங்கிக்காய் தமிழ் கோஷம்
வென்றபின் மணக்கும் மேட்டுக்குடி வாசம்





பள்ளன், பறையன், மட்டக்களப்பான் மடையன்,
தோட்டக்காட்டான், சோனி, வன்னிக் காடன்
யாழ் மேட்டுக்குடிகள் தமிழ் பேசும் மக்களுக்கு இட்ட
சாதியக் குறி, அதிகார வெறியின் அடையாளங்களே

மட்டக்களப்பிற்கு நல்லது செய்த நல்லையா மாஸ்டரை
அரச கைக்கூலி என்று தோற்கடித்தார்-கட்சியை வளர்த்த
இராஜதுரையை, காசி ஆனந்தனை நிறுத்தி மோதவிட்டார்
செயல் வீரன் இராஜன் செல்வநாகத்தை தோற்கடித்தார்

தமிழ் ஈழ நிழல் நிர்வாகக் கட்டமைப்பில் 32 துறைச் செயலாளர்கள்.
அதில் 31 பேர் வடமாகணத்தவர், வடக்கை மையப்படுத்திய புலிகளின்
போராட்டம், -கிழக்கைப் புறந்தள்ளியது, குடாநாட்டில் பல்லாண்டு வாழ்ந்த
முஸ்லீம் மக்களை யாழ் மண் நின்று விரட்டியடித்தது-இயக்க மோதல்களால்,
பிரிவினையால் முப்பதாண்டுப் போராட்டம் தோற்றுப்போனது வரலாறானது

ஒன்றே குலம், ஒருவனே தேவன்-ஒன்றுபட்டால் உண்டு
வாழ்வு, ஒற்றுமை நீங்கில் நம் அனைவருக்கும் தாழ்வு
நீதியுடன் கூடிய , சமத்துவ, சுயநிர்ணய உரிமைகொண்ட
சமுதாயமே-மூவினத்திற்கும் ஏற்புடைய சுதந்திரம்

இந்திய ஆய்வின்படி ஈழத்தில் வாழும் சிங்கள, தமிழ் இனத்தின்
டி.என்.ஏ ஒன்றே- மொழியால், மதத்தால் பிரிந்த இனங்கள்
தம்முள் மோதிக் கொள்வது அறியாமையே, நிறமூர்த்தங்களிலும்
இல்லாத இனவாதம், ஆளும் சாதியம் அசிங்கப் பேரினவாதம்

எல்லாப் புகழும் இறைவனுக்கே
இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
Pax Ravichandra-10-10-2023



Sinhalese, Sri Lankan Tamils Share Striking Genetic Similarity Study Finds

Date
9/4/2023 4:17:34 AM

Share on Facebook | Tweet on Twitter

(MENAFN- NewsIn.Asia) New Delhi (NDTV) – Sri Lanka's two largest ethnic groups, the Sinhalese and the Sri Lankan Tamils, who were engaged in a longstanding civil war, are genetically more similar to each other than any other South Asian population group, according to a study.

The research, published on Friday in the journal iScience and conducted jointly by Indian and Sri Lankan DNA scientists, sheds light on the historical origins of the ethnic groups in Sri Lanka as well as their social interactions.

For similar articles, join our Telegram channel for the latest updates. – click her

ADVERTISEMENT
The researchers noted that despite significant cultural and linguistic differences, th two groups intermingled in the past for several hundred years, which resulted in genetic affinity.

“Though the majority Sinhalese and the minority Sri Lankan Tamils entered into a bloody conflict during the colonial era, which continued till 2009 with the end of th civil war, mutual distrust and enmity still exist between them. However, our finding are truly intriguing,” Professor Gyaneshwer Chaubey from the Department of Zoology, Banaras Hindu University (BHU), Varanasi, said.

விழிப்புணர்வு

இளமையும், அழகும் ஜொலிக்கும் கட்டுடல் கன்னியர் நெஞ்சங்களைக்
கவர, பெருமான் புத்தர் காட்டிய வழியில், காதலாகித் தரித்த
காவியும், மழித்த சிரசும் மனதில் ஞானமாய் ஒளிர-கருணை
பொங்கித் ததும்பும் முகம், பிட்சைக்காய் மாளிகை முன் நின்ற தவம்



ஏந்திய தானக் கலயமும், தம்மத்தை
மொழியும் இதயமும் , நெருப்பாய் ஒளிரும்
சீவர ஆடையும்-மாசு நெருங்காத மனம்
பசும் பொன் எனச் சொல்லாமல் சொல்லியது



கண்டவள் விழிகளில் அதிசயம், நெஞ்சோ
துடித்தது இளமையில் ஏனிந்தத் துறவறம்
காதலாகித் துடித்த இளவரசி, வைரங்கள் பதித்த
பொற்கலத்தில் வழங்கி உணவோ அமுதின் ருசி

பெற்றவர் நன்றியோடு வாழ்த்தி தம் வழி நடந்திட
ஈந்தவள் இழந்த நெஞ்சோடு வருந்தி மாளிகையில்
நின்றிட, கண்ட கள்வனுக்கோ வியப்பு, துறவியைத்
பின் தொடர்ந்து -பொற்கலத்தை திருடும் களிப்பு

ஊருக்கு வெளியே பாழடைந்த மனை துறவியின்
இருப்பிடம், நாளும் ஊராருக்கு தம்ம போதனையோ
அன்னாரின் கீர்த்தனை, பிச்சை ஏற்று உணவருந்தி
மெய் ஞானம் கிட்டும் வாழ்வோ புனித யாத்திரை



வந்தவர் அமர்ந்து அமுதுண்டு பசியாற,-பின்
தொடர்ந்த கள்வனோ ஒளித்திருந்து, இரவு மலரட்டும்,
துறவி உறங்கட்டும், விலை மதிப்பற்ற பொற்கலத்தை
திருடினால் வறுமை நீங்கிடும், சுகபோகம் நம் சொந்தம்



கனவு காணத், துறவி வீசி எறிந்த வெற்றுப் பொற்கலம்
கள்வன் காலடியில் வீழ்ந்திட-கலங்கிய மனம்
பொன்னும், வைரமும் இழைத்த கலத்தை குப்பை என
வீசிய மனதை போற்றியது, தாழ்பணிந்து வணங்கியது

ஐயனே விலைமதிப்பில்லாத இப் பொற்கலம்
வேண்டாத ஒன்றாயின், உங்களிடம் விலை மதிப்பில்லாப்
பெருநிதி உண்டு, என்க்கருளுங்கள், வறுமை தீர
அமைதி பொங்க என் வாழ்வு மலரட்டும்

என்னை நீ பின் தொடர்வதை நான் அறிவேன்
இந்த பொற்கலத்தை முன்னிட்டு நீ
திருடனாவதை நான் விரும்பவில்லை-அதனால்
நீ இருக்கும் திசை நோக்கி வீசி எறிந்தேன்

மண், பொன். பெண் துறந்த பௌத்த துறவிக்கு தம்மமே பெரு நிதி,
அழியும் பொன் பொருளால் கெடும் நிம்மதி, நான் நிம்மதியோடு உறங்க
இதுவே தடையாகும், உனக்கும் இதை அடையும் வரை கவலை வருத்தும்,
தூக்கம் கெடும் , சொல்லி கருணையோடு சிரித்தார் துறவி



துறவு பூண என் மனதில் ஆசை. ஆனால்
களவோ என் தொழில், விட்டொழிக்க முடியாத
ஆசைப் புயல், நாளும் என்னை வருத்திட
துறவுக்கு இதுதான் தடை

களவை விட்டு வா, துறவு பூணலாம்
கனிவோடு அழைத்த துறவியர் பலர்
களவோ என்னோடு ஒட்டிப் பிறந்த இரட்டை
விட்டு பிரியாத நிழலான சட்டை

களவை எப்படித் துறப்பது? கற்றறிய முடியாத
பெருவித்தை, துறவிகளாலும் வழி கூற இயலாத,
என்னை வருத்தும் சித்திர வதை, தயை கூர்ந்து
மனமிரங்கி களவை ஒழிக்கக் கருணை காட்டுங்கள்



கருணையோடு அவனை நோக்கியவர்
திருடாதே எனக் கூறமாட்டேன்-திருடு
திருடும்போது நான் திருடுகின்றேன் என்னும்
விழிப்புணாவோடு திருடு- இதுதான் வழி

நள்ளிரவில் பெருவணிகன் மாளிகையில் கன்னம் வைத்து
திருடச் சென்றவன் கண்களில் , பொன்னும், மணியும்,
தென்பட, திருட விளைந்தவனுக்கு துறவியின்
வார்த்தைகள் விழிப்புணர்வோடு திருடு எச்சரித்தன

சுயம் விழித்திட, பிறர் பொருளை களவாடுவது
பாவம், அவர்தம் உழைப்பை கொள்ளையிடுவது
குற்றம், விழிப்புணர்வு எச்சரிக்க, திருடனா நான்
மனதிலே முதன் முதலில் தோன்றிய வெட்கம்

நாணிய மனம் கூனிக் குறுகியது-துறவியின் வார்த்தை
விழிப்புணர்வின் திறவுகோலானது

நாணியவன் திருட்டை மறந்தான், நம்பிக்கையோடு
ஓடோடி வந்து துறவியின் பாதங்களைப் பணிந்து
நடந்தை உரைத்து, ஐயனே சரணம் என்றான்
என் மனம் விழித்துவிட்டது, களவை ஒழித்து விட்டது.



அன்போடு அவனைத் தழுவியவர், ஆசையும்,
அறியாமையம் பெருந்துன்பம், ஆசை கழித்து
அறியமை ஒழிக்க துறவறமே நல் வழி
விழிப்புணர்வே உன் கை விளக்கு

கருணை மனம் கனிவோடு புன்னகைத்து பரிவோடு அணைத்து,
களவையும், விழிப்புணர்வில் அறிந்து துறந்தாய், புது மனிதன் நீ
பெருமன் புத்தரின் வழியில் வாழ் -புத்த நிலை உன்னுள்ளே
உனக்கு நீயே ஒளியாகிப் போ-வாழ்த்தினார்

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-12-02-2024